இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER
இதழ் 379
சனி, 21 பெப்ரவரி , 2026 |
பக்கங்கள் 20
www.ilakku.org



# மீண்டும் தலைதூக்கும் பௌத்தவாதம்
## மறைகரங்களாக படை அதிகாரிகள்

விதுரன்






## 2026 தமிழக தேர்தல் அரசியல்:
### ஈழத்தமிழ் அரசியலும் தமிழக ஈழத்தமிழ் அகதிகளின் அரசியல் நிலையும்

இலக்கின் ஆய்வுக் கட்டுரை



# நீண்ட பிராந்திய போருக்குள் செல்ல அமெரிக்கா அஞ்சுகின்றதா?

வேல்ஸில் இருந்து அருஸ்

# பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராக மீண்டும் ஒரு தீர்மானம்




பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்றும், தற்போது அரசினால் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அமுல்படுத்தக் கூடாது என்றும் வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது தவிசாளரால் பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் தற்போது அரசினால் புதிதாக முன் மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களுக்கு எதிராக சபையில் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

குறித்த தீர்மானத்திற்கு தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் எதிர்ப்பை தெரிவித்த நிலையில் ஏனைய உறுப்பினர்களின் ஆதரவுடன் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது. முன்னதாக முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச சபையிலும் இது போன்ற யோசனை நிறைவேற்றப்பட்டது. எனினும் அந்த சபைகளில் தேசிய மக்கள் சக்தியினர் நடுநிலை வகித்தனர்.

## தலைவர் பிரபாகரனின் காலத்தில் வடக்கில் போதைப் பொருள் இருக்கவில்லை: பாராளுமன்றில் சுட்டிக்காட்டு



தலைவர் பிரபாகரன் இருந்த காலத்தில் வடக்கில் போதைப்பொருள் பாவனை மற்றும் பாலியல் சித்திரவதைகள் இருக்கவில்லை என்று மலையக மக்கள் முன்னணி தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற அபாயகரமான ஔடதங்கள் திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள இந்த திருத்தச் சட்ட மூலங்களுக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாவதால் குடும்பமே இல்லாமல் போகிறது. இவ்வாறான நிலைமையில் இதற்காக உரிய சட்டங்கள் அவசியமாகும்.

இதனால் இந்த சட்டமூலத்தின் நோக்கம் மிகவும் வரவேற்கத்தக்கது என்று பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். நாட்டின் பொருளாதார வளர்ச்சியை குன்ற வைப்பதில் போதைப்பொருள் விநியோகமும் போதைப் பொருள் பாவனையும் பிரதான பங்கு வகிக்கிறது.

“வடக்கு மற்றும் கிழக்கை எடுத்துக்கொண்டால் பிரபாகரன் இருந்த காலத்தில் அங்கு போதைப்பொருள் பாவனையோ துஷ்பிரயோகங்களோ இருந்ததே இல்லை”

**தொடர்ச்சி: பக்கம் 19**

## சட்டத்தரணிகள் சங்கப் பிரதிநிதிகளுடன் ஐ.நா வதிவிடப் பிரதிநிதி கலந்துரையாடல்

ශ්‍රී ලංකා නීතිඥ සංගමය
BAR ASSOCIATION OF SRI LANKA
இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரைச் சந்தித்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி, சட்டத்தரணிகளுக்கான பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்தவேண்டியதன் அவசியம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

அக்குரேகொட பகுதியில் கடந்த வாரம் வெள்ளிக்கிழமை (13) இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் நடாத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் சட்டத்தரணி ஒருவரும், அவரது மனைவியும் கொல்லப்பட்ட சம்பவம் நாடளாவிய ரீதியில் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ரஜீவ் அமரசூரியவுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க் அன்ட்ரூ-பிரான்சேவுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள சட்டத்தரணிகள் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பு தொடர்பில் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் ஐ.நா வதிவிடப்பிரதிநிதி, இச்சந்திப்பின்போது உரிய சட்ட செயன்முறையை வலுப்படுத்தவேண்டியதன் அவசியம், சட்டத்தரணிகளுக்கான பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்துதல் மற்றும் சர்வதேச நியமங்களுக்கு ஏற்புடைய வகையில் புதிய சட்டங்கள் தயாரிக்கப்படுவதில் சட்டத்தரணிகள் சங்கத்தின் வகிபாகம் உள்ளிட்ட விடயங்கள் பற்றி விரிவாகக் கலந்துரையாடப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# எப்ஸ்டீன் விவகாரம் இந்தியாவில் உரையை நிறுத்திய பில் கேட்ஸ்

டெல்லியில் நடைபெறும் இந்திய செயற்கை நுண்ணறிவு தாக்க உச்சி மாநாட்டில் பில் கேட்ஸ் தனது முக்கிய உரையை நிகழ்த்த மாட்டார் என்று அவரது பரோபகார அமைப்பு மைக்ரோசாப்ட் இணை நிறுவனர் பேசுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு தெரிவித்துள்ளது.

“கவனமாக பரிசீலித்த பிறகு” மற்றும் “உச்சி மாநாட்டின் முக்கிய முன்னுரிமைகளில் கவனம் செலுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக” இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கேட்ஸ் அறக்கட்டளை கூறியது, ஆனால் அதை விரிவாகக் கூறவில்லை.

ஜனவரி மாதம் அமெரிக்க நீதித்துறை வெளியிட்ட புதிய கோப்புகளில் மறைந்த பாலியல் குற்றவாளி ஜெஃப்ரி எப்ஸ்டீனின் பெயர் சேர்க்கப்பட்ட பின்னர் கேட்ஸின் விலகல், அவர்களுடனான அவரது உறவுகள் குறித்த சர்ச்சையின் மத்தியில் வந்துள்ளது.

கேட்ஸின் செய்தித் தொடர்பாளர் கோப்புகளில் உள்ள கூற்றுகளை “முற்றிலும் அபத்தமானது மற்றும் முற்றிலும் தவறானது” என்று கூறியுள்ளார், மேலும் எப்ஸ்டீனுடன் நேரத்தை செலவிட்டதற்கு வருத்தப்படுவதாகக் கூறியுள்ளார்.

எப்ஸ்டீனால் பாதிக்கப்பட்டவர்கள் எவரும் கேட்ஸ் மீது தவறு செய்ததாக குற்றம் சாட்டவிலை,

**தொடர்ச்சி: பக்கம் 18**



## சாகோஸ் தீவுகளை மீண்டும் ஒப்படைப்பதில் இருந்து பின்வாங்கிய பிரித்தானியா



பிரிட்டனின் தீவுக்கூட்ட ஒப்பந்தம் மீதான தனது தாக்குதலை அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், மீண்டும் புதுப்பித்ததை அடுத்து, சாகோஸ் தீவுகளின் இறையாண்மையை மொரீஷியஸிடம் ஒப்படைப்பதற்கான சட்டத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் தாமதப் படுத்தியுள்ளது.

ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்ட சட்டத்தை மீண்டும் ஹவுஸ் ஆஃப் லார்ட்ஸுக்குக் கொண்டுவருவதற்கான திட்டங்கள் குறித்து கெய்ர் ஸ்டார்மரின் நிர்வாகம் “சிந்தனைக்கு இடைநிறுத்தப்படும்” என்று இங்கிலாந்து அரசாங்கத்தின் மூத்த அதிகாரி ஒருவர் இந்தத் திட்டங்கள் குறித்து தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் இந்தியப் பெருங்கடல் பிரதேச (இறையாண்மை மற்றும் அரசியலமைப்பு ஏற்பாடுகள்) மசோதா விவகாரத்தில் வாஷிங்டனுடன் மோதியதாக பிரிட்டன் நம்பியுள்ளது. அது “பெரிய முட்டாள்தனமான செயல்” என்று அமெரிக்க ஜனாதிபதி அழைத்ததை அடுத்து, கடந்த மாதம் 11 ஆம் திகதி அமைச்சர்கள் ஏற்கனவே பிரிட்டிஷ் இந்தியப் பெருங்கடல் பிரதேச (இறையாண்மை மற்றும் அரசியலமைப்பு ஏற்பாடுகள்) மசோதாவை நிறுத்தி வைத்துள்ளனர்.

மொரிஷியஸுக்கு முன்னாள் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய உடைமையின் கட்டுப்பாட்டை வழங்கும் இந்த ஒப்பந்தம், குத்தகை ஒப்பந்தம் மூலம் டியாகோ கார்சியாவில் உள்ள அமெரிக்க-இங்கிலாந்து இராணுவத் தளத்தைப் பயன்படுத்துவதை வலுப்படுத்தும் நோக்கம் கொண்டது, அதே நேரத்தில் தீவுகளின் தலைவிதி குறித்த சர்வதேச சட்ட

**தொடர்ச்சி: பக்கம் 08**

## உணவுக்காக வங்கிகளில் கடன் வாங்கும் அர்ஜென்டினா மக்கள்




அர்ஜென்டினாவில் கிட்டத்தட்ட பாதி மக்கள் தொகையினர் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யசேமிப்புகளைப் பயன்படுத்துவதாகவும், உடைமைகளை விற்பதாகவும் அல்லது வங்கிகள் உறவினர்களிடமிருந்து கடன் வாங்குவதாகவும் கூறுகிறார்கள் என்று சமீபத்திய அதிகாரப்பூர்வ புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்ட அர்ஜென்டினா கிராண்டேவின் அறிக்கை தெரிவிக்கிறது.

அர்ஜென்டினாவில் 63 சதவீத மக்கள் தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்கான நடவடிக்கைகள் அல்லது சேவைகளைக் குறைத்துள்ளனர் என்பதை ஃபண்டேஷன் பென்சரின் மற்றொரு அறிக்கை,

**தொடர்ச்சி: பக்கம் 08**

## நேட்டோவின் மாநாட்டில் இருந்து உக்ரைன் வெளியேற்றம்



டொனால்ட் ட்ரம்பின் கீழ் அமெரிக்கா, ஈராக்கில் ஒரு முக்கிய கூட்டணிப் பணியை முடிவுக்குக் கொண்டுவருவது உட்பட அதன் பல வெளிநாட்டு நடவடிக்கைகளைக் குறைக்க நேட்டோவை வற்புறுத்தி வருவதாக நான்கு நேட்டோ தூதர்கள் POLITICO ஊடகத்திடம் தெரிவித்துள்ளனர்.

சமீப மாதங்களில், கொசோவோவில் நேட்டோவின் அமைதி காக்கும் நடவடிக்கையைக் குறைக்கவும், உக்ரைன் மற்றும்

**தொடர்ச்சி: பக்கம் 19**

# வடக்கின் சீரற்ற ஆசிரிய வளப் பரவலாக்கத்தை சீர்ப்படுத்தக் கோரிக்கை

வடக்கு மாகாணத்தின் சீரற்ற ஆசிரியவளப் பரவலாக்கத்தினால் வன்னிப் பிராந்தியத்திலுள்ள மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சீரற்ற ஆசிரிய வளப் பரவலாக்கத்தை விரைந்து சீர்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்.

பாராளுமன்றக் குழு அறையில் நேற்று (20.02.2026) இடம் பெற்ற கல்வி, ஊழியப்படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறை சார் மேற்பார்வைக்குழுக்கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.



இந்நிலையில் குறித்த கூட்டத்தில் தம்மால் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ரவிகரன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையில் உள்ளீர்ப்பதற்கான போட்டிப்பரீட்சைக்கான அறிவித்தல் கடந்த 2026.02.02 ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானி ஊடாக வெளியாகியது.

குறித்த வர்த்தமானி அறிவித்தலில் கர்நாடக சங்கீதம், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களில் திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வடமாகாணத்துக்கான விண்ணப்பம் கோரப்படாமலிருந்தது.

இந்நிலையில் கடந்த 17.02.2026அன்று வடமாகாணத்தில் கர்நாடக சங்கீதம் மற்றும் இந்து நாகரிகம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரிய நியமன விண்ணப்பங்கள் கோரப்படவேண்டுமென கல்வி அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தேன்.

இத்தகையசூழலில் கடந்த 18.02.2026ஆம் திகதி வர்த்தமானி மூலம் வடமாகாணத்திற்கு இந்துநாகரிக பாடத்திற்கான ஆசிரிய நியமன விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எனவே அதற்காக கல்வி அமைச்சிற்கு குறித்த கூட்டத்தில் எனது நன்றிகளைத் தெரிவித்திருந்தேன்.

எனினும் மாகாண அடிப்படையில் இந்துநாகரிக பாடத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட 125 ஆசிரியர்களில் 93 ஆசிரியர்களே தற்போதிருப்பதாக வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் புள்ளிவிபரம் சுட்டிக்காட்டுவதையும், இந்து நாகரிகம் பாடத்தில் வடமாகாணத்தில் 75சதவீத ஆசிரியர்களே காணப்படுவதையும் இதன்போது சுட்டிக்காட்டியிருந்தேன்.

மேலும் யாழ்ப்பாணத்தில் 89 சதவீத ஆசிரியர்கள் காணப்படுகின்ற போதும் முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் 50சதவீத ஆசிரியர்கள், வவுனியா மாவட்டத்தில் 64சதவீத ஆசிரியர்களே உள்ளார்கள் என்பதை எடுத்துக்கூறியதுடன், இந்தப் புள்ளிவிபரம் வடமாகாணத்தில் சீரற்ற ஆசிரியர் வளப்பரவலாக்கத்தை வெளிக்காட்டுகிறது என்பதையும் சுட்டிக்காட்டினேன்.

அதேவேளை வடமாகாணத்தில் கர்நாடக சங்கீதத்திற்குரிய ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆளணி 476. தற்போதுள்ள ஆளணி 506.

அந்தவகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 132சதவீதமான கர்நாடகசங்கீத ஆசிரியர்களும், கிளிநொச்சி 92சதவீதமான ஆசிரியர்களும், மன்னார் 72 சதவீதமான ஆசிரியர்களும், வவுனியா 60 சதவீத ஆசிரியர்களும் முல்லைத்தீவு 85சத வீத ஆசிரியர்களும் காணப்படுகின்றனர்.

கர்நாடக சங்கீத பாடத்திற்கு வடமாகாணத்தில் 30 ஆசிரியர்கள் மிகையாக உள்ள போதும், யாழ்ப்பாணத்தில் மட்டும் 81 ஆசிரியர்கள் மிகையாக உள்ளனர். ஆனால் வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள 6 கல்வி வலயங்களில் 46 ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர். இது வன்னிமாவட்ட பிள்ளைகளுக்கு நேரும் அநீதி என்பதையும் குறித்த கூட்டத்தில் சுட்டிக்காட்டியிருந்தேன்.

இத்தகையசூழலில் வன்னியிலுள்ள எமது பிள்ளைகள் பாடத்திற்கு ஆசிரியர்கள் இன்றி கலைத்திறன் பெற வழியற்று இருக்கும் நிலையிலும் யாழ்ப்பாணத்தில் 81 கர்நாடக சங்கீத ஆசிரியர்கள் மிகையாக உள்ளனர் என்பவற்றைச் சுட்டிக்காட்டி இந்த சமச்சீரற்ற வளப்பரவலாக்கத்தை விரைந்து சீர்ப்படுத்துமாறும் வலியுறுத்தியிருந்தேன்.

மேலும் முல்லைத்தீவில் 08 கர்நாடக சங்கீத ஆசிரியர்கள் தேவையாக உள்ள நிலையில் 16 இற்கும் மேற்பட்ட கர்நாடக சங்கீத பட்டதாரிகள் முல்லைத்தீவில் மட்டும் உள்ளார்கள் என்பதைச் சுட்டிக்காட்டியதுடன், கர்நாடக சங்கீதத்திற்கான ஆசிரிய ஆட்சேர்ப்பிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டால்

தொடர்ச்சி: பக்கம் 19

## ஆசிரியர் தலையங்கம் | 21 பெப்ரவரி, 2026

### ஈழத்தமிழர்கள் இறைமையைப் பேண யாருமே பொலிஸ்காரராக அரசியல் நடாத்தாது இருக்க வேண்டிய நேரமிது

உலக அரசியல் முறைமை, அனைத்துலகச் சட்டங்கள் மட்டுமல்ல நாட்டின் அதியுயர் நீதிமன்றங்களின் தீர்ப்புகள் கூட ஆட்சியில் உள்ளவர்களால் புறக்கணிக்கப்படும் நிலை இன்றைய உலகின் சமகால அரசியலாக உள்ளது. அமெரிக்க அரச அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அவர்கள் அவர் கடந்த ஆண்டில் நாடுகள் மேல் விதித்த வர்த்தக இறக்குமதி வரிகள் சட்டத்திற்கு எதிரானது என்று அமெரிக்க அதியுயர் நீதிமன்றத்தின் ஆறு நீதியரசர்களின் தீர்ப்பு நேற்று வெளிவந்தது. ஆனால் உடனேயே அமெரிக்காவுடனான வர்த்தகத்தில் உள்ள உலக நாடுகளின் மேல் 10 வீத வரிவிதிப்பைச் செய்து தீர்ப்பை அமெரிக்க அதிபர் தான் மதிக்கப் போவதில்லையெனச் செயலில் காட்டினார். அது மட்டுமல்லாமல் தான் அமெரிக்க காங்கிரசிடம் வரி விதிப்புகள் குறித்த அதன் சட்டவாக்கங்களுக்கு அமைய வேண்டியதில்லையென தனது நிறைவேற்று அதிகாரமுள்ள அரசஅதிபர் பதவியின் வலிமையை உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

அத்துடன் ஈரான் அமெரிக்காவுடன் உடன்பாட்டுக்கு வரவில்லையென்றால் ஈரானைத் தாக்குவதற்கான கடல்வழி வான்வழி முன்னாயத்தங்களையும் அவர் செய்து வருவதும் ஈரான் இராணுவ ட்ரில் என்கின்ற போருக்கான முன்னொத்திகை நடத்தியதும் அதில் ரஸ்ய கப்பல்களும் இணைந்து அதனை நடத்தியதும் அத்துடன் மத்திய கிழக்கு விவகாரத்தில் அமெரிக்காவின் நடவடிக்கைகள் எல்லைப்படுத்தப்பட வேண்டுமென்ற பாணியில் ரஸ்யா அறிவித்தல் விடுத்ததாக அல்அஜீராச் செய்திகள் வெளியானதும் உலகில் மூன்றாவது உலகப் போர் அருவநிலையில் இன்று நடைபெற்று வருவதை உண்மையான போராக வெளிப்படுத்தும் நிலை தோன்றி விடுமா என்கின்ற எச்சரிப்புக்கள் உலகின் பல ஆய்வாளர்களால் வெளிவந்தவண்ணம் உள்ளன. அதே நேரத்தில் சிறிலங்காவில் அமெரிக்காவின்பசிபிக்கடற்படையின்கட்டளைத்தளபதிஅட்மிரல்ஸ்டீவ்கேலரின்சிறிலங்காவுக்கான பயணம் சிறிலங்காவின் தேசிய நலனைப் பலப்படுத்தவும் அமெரிக்காவின் கடல்வழிப் பாதைகளை பாதுகாப்பதற்கான வெறும் பாதுகாப்பு ஒப்பந்தமாக மட்டுமல்லாது பொருளாதாரம், இறையாண்மை மற்றும் பிராந்திய உறுதிப்பாட்டுக்கான இருநாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு விரிவாக்கமாக உள்ளதெனக் கொழும்புச் செய்திகள் எடுத்து விளக்கியுள்ளன.

இந்நிலையில், நிறைவேற்று அதிகாரமுள்ள அரச அதிபர் ஒருவர் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்திப் பாராளுமன்ற சனநாயக ஆட்சிமுறைக்குள்ளும் சர்வாதிகாரியாகச் செயற்பட முடியும் என்கின்ற நிலையை உலக வரலாற்றில் ஐக்கிய தேசியக்கட்சியின் சிறிலங்காவின் முன்னாள் அரச அதிபர் ஜே. ஆர் ஜயவர்த்தனா தான் 1978ம் ஆண்டில் அவரால் கொண்டு வரப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு மூலமே உலகுக்கு முன்னுதாரணம் அமைத்தார் என்பது உலக அரசியல் வரலாறு. அவ்வாறே 1796 முதல் 1948 வரை 152 ஆண்டுகள் ஈழத்தமிழரின் இறைமையைத் தன்வயப்படுத்தி வைத்திருந்த பிரித்தானியக் காலனித்துவ அரசாங்கம் சோல்பரி அரசியல் அமைப்பின் மூலம் சிங்களப்பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறைமைக்குள் உட்படுத்திய பொழுது, சோல்பரி அரசியலமைப்பின் 29(2) விதியை பிரித்தானிய முடிக்குரிய அரச ஆட்சியாளரின் கவுன்சில் அல்லது பிரித்தானிய பாராளுமன்றம் மட்டுமே மாற்ற முடியும் என்கின்ற நிலையில், இலங்கைப் பாராளுமன்றத்துக்கு வெளியே நவரங்கலாவில் கூடிய ஈழத்தமிழர்களின் பாராளுமன்றப் பிரதிநிதிகளில் மூன்றில் இரண்டு பகுதியினருக்கு மேல் கலந்து கொள்ளாத அரசியலமைப்பு உருவாக்கச் சபை ஒன்றின் மூலம் சோல்பரி அரசியலமைப்புச் சட்டத்தை தன்னிச்சையாக மாற்றி, பிரித்தானிய பிரிவிக்கவுன்சில் சிங்கள மட்டும் சட்டத்தை மீளப்பெற்று வழக்கைத் தாக்கல் செய்த சிங்களம் மட்டும் சட்டத்தால் வேலையிழந்த கோடீஸ்வரன் என்பவருக்கு வழக்குத் தொகையுடன் அந்நாள் வரையான சம்பளத்தையும் வழங்கி, சோல்பரி அரசியலமைப்புக்கு அமைய புதிதாக அரச கரும மொழிச்சட்டத்தைக் மீளவும் பாராளுமன்றத்தில் கொண்டு வர வேண்டும் என்கின்ற தீர்ப்பை வன்முறைப்படுத்தி அரசற்ற தேசஇனமாக ஈழத்தமிழர்களையாக்கிய அந்த வழக்கே இன்று நீதிமன்றங்களின் தீர்ப்புக்களை உலகின் ஆட்சியாளர்கள் தங்கள் விருப்புக்கேற்ப அலட்சியம் செய்யும் உலக அரசியல் முறைமையைத் தொடக்கி வைத்தது என்பது வரலாறு.

ஈழத்தமிழர்கள் 22.05. 1972 இல் அரசற்ற தேச இனமாக்கப்பட்டதால் அவர்களின் தன்னாட்சி உரிமையைக் கொண்டு அவர்கள் தங்களுக்கான அரசியல் எதிர்காலத்தைத் தாங்களே அமைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு, காலனித்துவத்தால் தீரிக்கப்படாத பிரச்சினையாக ஈழத்தமிழர்கள் தங்களின் வரலாற்றுத் தாயகத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுள்ளவர்களாக உள்ளனர் என்ற வரலாற்று உண்மையின் அடிப்படையில் தங்களின் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளைப் பேணி காலனித்துவத்தில் இழந்த தங்களின் அரசியல் உரிமையாம் தமது சொந்த மண்ணில் தமது பாதுகாப்பான அமைதியான ஆட்சியையும் மீள அமைப்பதற்கான வரலாறாகியது என்பதும் உலக வரலாறாக உள்ளது.

இதனை 1975இல் சிறிலங்காவின் தேசிய சபையில் உறுதி எடுக்காது அதிலிருந்து ஈழத்தமிழர்களின் அக்கால அரசியல் தலைவராக விளங்கிய சா.ஜே. வே. செல்வநாயகம் அவர்கள் ஈழத்தமிழர்களின்தன்னாட்சிப் பிரகடனத்தைகாங்கேசன்துறைத்தேர்தல்தொகுதியில்நடாத்தப்பெற்ற அடையாளக் குடியொப்பத்தின் வெளிப்பாடாகச் செய்து அதன் பின்னர் வட்டுக்கோட்டை தீர்மானமாக 14.05. 1976இல் இன்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன் அதனை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் உலகுக்கு வெளிப்படுத்தி 1977 இல் அதற்கான ஈழத்தமிழரின் குடியொப்பத்தை தேர்தல் மூலம் உலகிற்கு உறுதிப்படுத்தி தேர்தலில் வெற்றி பெறும் ஈழத்தமிழர் பிரதிநிதிகள் தமிழீழத்தை அமைப்பதற்கான தேசிய சபையாகச் செயற்பட்டு தமிழீழத்திற்கான அரசியலமைப்பை உருவாக்குவார்கள்.

இதனை சிறிலங்கா சனநாயக முறையில் ஏற்க மறுத்தால் வேறு எந்த வழிகளிலும் அதனை அடைவோம் என உலகிற்குப் பிரகடனப்படுத்தினர். இதுவே 1978 முதல் 2009 வரையான ஈழத்தமிழர்களின் நடைமுறையரசுக்கான சட்டத்குதியை அளித்தமை வரலாறு. 2009 முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பின் மூலம் சிறிலங்கா தேசமாக 146000 க்கு மேற்பட்ட ஈழத்தமிழர்களை இனஅழிப்புக்குள்ளாக்கி கூடவே ஈழத்தமிழர்களின் தாயகத்தின் அனைத்து உட்கட்டுமானங்களையும் அழித்தும் அன்று முதல் இன்று வரை 17 ஆண்டுகள் மீளவும் சிறிலங்காப் பாராளுமன்றம் என்னும் ஈழத்தமிழர்களை ஆளும் அரசியலமைப்புத் தகுதியை இழந்த பாராளுமன்ற கொடுங்கோன்மை மூலம் ஈழத்தமிழர்களை 1956 முதல் இன்று வரையான 70 ஆண்டுகால திட்டமிட்ட ஈழத்தமிழின அழிப்பு, பண்பாட்டு இனஅழிப்பு இனத்துடைப்பு அரசியல் மூலம் தொடர்ந்து வரும் நிலையில் புதிய அரசியலமைப்பு ஒன்றினை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இன்று கொண்டு வர முயற்சிக்கிறது.

இதனை ஈழத்தமிழர்கள் எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றார்கள் அதற்கு அனைத்துலக இன்றைய புதிய அரசியல் முறைமைகள் எவ்வாறு அமையப் போகின்றன என்பதே இன்றுள்ள கேள்வி என்பது இலக்கின் இவ்வார எண்ணமாக முன்வைக்கப்படுகிறது. சீனா அமெரிக்காவுக்குச் சொன்ன யாருமே பொலிசாகச் செயற்படல் தேவையில்லை என்கின்ற கூற்றைத் தான் ஈழத்தமிழ் அரசியல் வாதிகளுக்குச் இலக்கு மீள்நினைவுறுத்த விரும்புகிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை குறை கூறும் பிழைப்படுத்தும் அரசியலை விடுத்து அவர் அவரை இந்தச் சூழலில் தாயகம் தேசியம் தன்னாட்சியின் அடிப்படையில் ஈழத்தமிழர்களுக்கான பாதுகாப்பான அமைதியான வளர்ச்சிகள் உள்ள எதிர்காலத்தை அமைக்க உழைக்க இலக்கு பணிவன்பாக அழைக்கிறது.

**ஆசிரியர்**



# மீண்டும் தலைதூக்கும் பௌத்தவாதம்

# மறைகரங்களாக படை அதிகாரிகள்

இலங்கை அரசியலில் 'பௌத்தவாதம்' என்பது ஒரு ஆன்மீக மார்க்கமாக அல்லாமல், காலங்காலமாக சிறுபான்மை இனங்களை அடக்கியொடுக்கும் ஓர் அரசியல் ஆயுதமாகவே கையாளப்பட்டு வருகின்றமை வரலாறு நெடுகிலும் காணப்படுகிறது.

கொழும்பில் உள்ள அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று திரண்ட மகா சங்கத்தினர், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கத்திற்கு விடுத்துள்ள 'பத்தம்சப் பிரகடனம்' மற்றும் கடும் எச்சரிக்கைகள், இலங்கையை மீண்டுமொரு மதவாத இருண்ட யுகத்திற்குள் தள்ளும் முயற்சியாகவே கருதவேண்டியுள்ளது.



பௌத்த மதத்தின் பெயரால் முன்னெடுக்கப்படும் இந்த அதிகாரப் போர், ஒரு ஜனநாயக நாட்டின் விழுமியங்களைச் சிதைப்பதோடு, 'பௌத்தவாதம்' என்பது இலங்கைக்கு தீராதவொரு சாபக்கேடு என்பதை மீண்டுமொருமுறை உறுதிப்படுத்தியுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழக வேந்தர், மேல் மாகாண பிரதான சங்கநாயக்க மற்றும் மகா சங்க சம்மேளனத்தின் பிரதான ஆலோசகருமான முருத்தெட்டுவே ஆனந்த நாயக்க தேரர், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே ஸ்ரீ கல்யாணி சாமாஸ் ஸ்ரீ தர்ம மகா சங்க சபையின் அனுநாயக்க மற்றும் பிரதான லேக்காதிகாரி, அக்கிமஹாம கோபாத்தியாய பண்டித பேராசிரியர் கொட்டபிட்டியே ராகுல அனுநாயக்க தேரர், மொரட்டுவ லூனாவ ஸ்ரீ போதிராமதிபதி மற்றும் கொழும்பு பல்கலைக்கழக சிங்கள ஆய்வுத்துறைத் தலைவர் பேராசிரியர் அகலகட சிறிசுமன தேரர் என்று அணிதிரட்ட முக்கிய தேரர்களின் பட்டியல் நீளுகின்றது.

இந்த தேரர்கள் வெறுமனே விகாரைகளில் கடமையாற்றுபவர்கள் அல்ல. சிங்கள மக்கள் மத்தியில் தங்களின் கல்விச் செழுமையால் வெகு வாக மதிக்கப் படுகின்ற புத்திஜீவிகளும் கூட. அவ்வா றான நிலையில் குறித்த தேரர்கள் உள்ளடங்கலான மகா சங்கத்தினரின் நிறைவேற்றியுள்ள பிரகடனத்தில் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் அதிர்ச்சியளிக்கின்றன.

குறிப்பாக, 1972 மற்றும் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புகளில் பௌத்தத்திற்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையை எக்காரணம் கொண்டும் மாற்றக்கூடாது என்ற முதல் கோரிக்கையானது, இலங்கையை மதச்சார்பற்ற நாடாகவோ அல்லது சமத்துவமான நாடாகவோ ஒருபோதும் மலர விடமாட்டோம் என்பதற்கான பகிரங்க அறைகூவல் என்பதோடு பௌத்த குடியரசாக பிரகடனப்படுத்த வேண்டும் என்ற சித்தாந்தத்தை வலுப்படுத்துவதாக உள்ளது.




இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது நாட்டில் இந்து மதத்தைப் பாதுகாப்பதைப் பார்த்து அநுரகுமார பாடம் கற்க வேண்டும் என்று முருத்தெட்டுவே ஆனந்த தேரர் கூறியிருப்பது, அண்டை நாட்டின் மதவாத அரசியலை இலங்கைக்குள் இறக்குமதி செய்யத் துடிக்கும் ஆபத்தான போக்கைக் காட்டுகிறது.

ஒரு நாட்டின் தலைவன் அனைத்து மதத்தினருக்கும் பொதுவானவனாக இருக்க வேண்டுமே தவிர, ஒரு குறிப்பிட்ட மதத்தின் பாதுகாவலனாக மட்டும் இயங்குவது ஜனநாயகப் படுகொலையாகும். அத்துணை கல்வித்தகையுடைய முருத்தொட்டுவே ஆனந்த தேரர் போன்றவர்களின் கூற்றுக்கள் மாதவாத பிடியின் அதியுச்சத்தை வெளிப்படுத்தியுள்ளது.



அதேநேரம் மேற்படி தேரர்களின் கட்டுறுதியான மதவாதக் கூச்சல்களுக்குப் பின்னால் இருப்பவர்களின் பின்னணியை ஆராய்ந்தால், அது 'தர்ம ராஜ்ய' போதனை அல்ல, மாறாக 'இராணுவமயமாக்கப்பட்ட இனவாதம்' என்பது தெளிவானது.

**விதுரன்**

அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனத்தின் தலைவர் சந்திர நிமல் வாகிஸ்ட போன்றவர்கள் இம்மாநாட்டின் முக்கிய சூத்திரதாரிகளாக உள்ளனர். இவர் ஒரு ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ் மா அதிபர் மட்டுமல்ல, முப்பது ஆண்டுகால யுத்தத்தின் போது தேசிய புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக இருந்து பயங்கரவாத ஒழிப்பு என்ற பெயரில் செயற்பட்டவர்.

ஒரு முன்னாள் உளவுத்துறை அதிகாரி, ஆன்மீக அமைப்பான பௌத்த மகா சம்மேளனத்திற்குத் தலைமை தாங்குவதும், யாழ்ப்பாண அரசாங்க அதிபரை அச்சுறுத்தும் வகையில் கடிதங்கள் எழுதுவதும், இலங்கையில் பௌத்த மதம் எவ்வாறு 'சீருடை அணிந்த இனவாதமாக' உருமாறியுள்ளது என்பதற்குச் சான்றாகும்.



ஆன்மீகப் போர்வையில் ஒளிந்திருக்கும் இத்தகைய புலனாய்வுப் பின்னணிகள், சிறுபான்மை மக்கள் மீதான உளவியல் ரீதியான ஒடுக்குமுறையைத் தீவிரப்படுத்துகின்றன. அதுமட்டுமன்றி பிரகடனத்தின் ஓரம்சமாக வடக்கு,கிழக்கில் பௌத்த அடையாளங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. அவற்றைத் தடுக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

உண்மையில் யாழ்ப்பாணம் தையிட்டியில் சட்ட விரோதமாகக் கட்டப்பட்ட திஸ்ஸ விகாரை விவகாரம், பௌத்த ஆக்கிரமிப்பு அரசியலின் உச்சக்கட்டம். முன்னாள் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா போன்றவர்களின் நேரடி அனுசரணையுடன், எவ்வித சட்டபூர்வ அனுமதியுமின்றி இராணுவத்தினரால் கட்டப்பட்ட திஸ்ஸ விகாரை, பௌத்த தர்மத்தின் அடையாளமல்ல. அது தமிழ் மக்களின் நிலங்கள் மீதான ஆக்கிரமிப்பின் சின்னம்.

திஸ்ஸ விகாரை சம்பந்தமாக கடந்தவார நடுப்பகுதியில் புத்தசாசன அமைச்சு நடத்திய பேச்சுவார்த்தைக்கு நிலங்களை இழந்த பொதுமக்களை அழைக்காமல், விகாரையின் விகாராதிபதியை மட்டும் அழைத்து ஆலோசிப்பது எவ்வகையான நீதி? பாதிக்கப்பட்டவர்களைப்

தொடர்ச்சி: பக்கம் 19

# அறிவார்ந்த அணுகுமுறையுடனான நேர்மையான செயற்பாடே இலக்கை எட்டும்

**திருகோணமலையில் சமீபத்தில் உருவாக்கப்பட்டுள்ள "ஈழத்தமிழர் உரிமைகள் பேரமைப்பு (*ETRA — Eelam Tamils Rights Assembly*)" என்ற சிவில் சமூக அமைப்பின் பின்னணி, அதன் நோக்கம், திருகோணமலைப் பிரகடனம், புலம்பெயர்ந்த தமிழர்களின் பங்கு மற்றும் எதிர்கால செயற்பாடுகள் குறித்து அமைப்பின் செயற்பாட்டாளர்களில்ஒருவரான திரு. சிறீஞானேஸ்வரன் அவர்களுடன் நடத்தப்பட்ட விரிவான உரையாடல்**

**கேள்வி :**

**திருகோணமலையில் நடைபெற்ற கூட்டம் குறித்து உங்கள் அனுபவத்தைச் சொல்லுங்கள். அந்த நிகழ்வு எவ்வாறுஅமைந்தது?**



**பதில் :**

திருகோணமலையில் நடைபெற்ற அந்த கூட்டம் எங்களுக்குப் பெரும் நம்பிக்கையையும் மனநிறைவையும் அளித்த நிகழ்வாக அமைந்தது. நிகழ்வு தொடங்கிய தருணத்திலிருந்து, அது நிறைவடைந்த வரைக்கும், கலந்து கொண்ட அனைவரிடமும் ஒரே உணர்வு தென்பட்டது. அதாவது, அரசியல் கலப்பின்றி, ஈழத்தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளை கையாளக்கூடிய ஒரு வலுவான சிவில் சமூக கட்டமைப்பு உருவாக வேண்டு மென்ற ஆவல்.

இந்த கூட்டத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த எட்டு மாவட்டங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர். பல்கலைக்கழக மாணவர்கள், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், தனிநபர்கள் எனப் பல தரப்பினரும் இணைந்தனர். திருமலை மறைமாவட்ட ஆயர் கலாநிதி நோயல் இமானுவேல் அவர்கள், அகத்தியர் அடிகளார் உள்ளிட்ட மதத் தலைவர்களும் இதில் பங்கேற்றனர். மொத்தமாக சுமார் ஐம்பது பேர் கலந்து கொண்ட இந்த நிகழ்வு, ஒரு கூட்டு முயற்சியாகவும், மக்கள் மையமாகவும் அமைந்தது.

**கேள்வி :**

**இந்த கூட்டத்தில் வெளியிடப்பட்ட "திருகோணமலைப் பிரகடனம்" ஏன் முக்கியமானதாக நீங்கள் கருதுகிறீர்கள்?**

**பதில் :**

திருகோணமலை இன்று ஒரு மிகக் கடுமையான அடக்குமுறைக்கு உட்பட்ட மாவட்டமாக மாறியுள்ளது. ஈழத்தமிழ் மக்கள் எந்தவொரு சாதாரண ஒன்றுகூடலையும் நடத்தினால் கூட, அது உடனடியாக பேரினவாத அமைப்புகளால் சந்தேகத்திற்குரியதாகச் சித்தரிக்கப்படுகிறது. அந்தச் சூழலில், திருகோணமலையில் இருந்து ஒரு அரசியல்-சமூக பிரகடனம் வெளியிடப்பட்டது என்பது தன்னிச்சையான ஒரு துணிச்சலான செயல்.

இந்தப் பிரகடனம், உள்ளூரில் மட்டுமல்லாமல் பன் னாட்டுத் தரத்திலும் ஒரு தெளிவான செய்தியை எடுத்துச் செல்கிறது. ஈழத்தமிழ் மக்கள் இன்னும் தங்களின் சுயநிர்ணய உரிமையிலிருந்து விலகவில்லை என்பதையும், அரசியல் அழுத்தங்களுக்குப் பயந்து அடங்கப்போவதில்லை என்பதையும் இந்த ஆவணம் வெளிப்படையாக அறிவிக்கிறது. எனவே, இது வெறும் ஒரு அறிக்கை அல்ல. எதிர்கால அரசியல் பயணத்திற்கான அடிப்படை ஆவணமாக அமைந்துள்ளது.

**கேள்வி :**

**"ஈழத்தமிழர் உரிமைகள் பேரமைப்பு" உருவாகும் எண்ணம் எவ்வாறு தோன்றியது?**

**பதில் :**

இந்த அமைப்பின் தேவை கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மிகவும் தெளிவாக உணரப்பட்டது. அப்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு அனுப்பப்பட்ட ஒரு கடிதத்தை நான் பார்வையிட்டேன். அந்தக் கடிதத்தில் ஈழத்தமிழர்கள் என்ற தனித்துவமான அரசியல் அடையாளம் சரியாக பயன்படுத்தப்படவில்லை.

முதலாவதாக, "தமிழர்கள்" என்ற பொதுவான சொல்லுக்குப் பதிலாக "ஈழத்தமிழர்கள்" என்ற அடையாளம் பயன்படுத்தப்பட வேண்டியது அவசியம். ஏனெனில், இனப்படுகொலை போன்ற விடயங்களில் அந்த அடையாளமே அரசியல் முக்கியத்துவம் பெறுகிறது.

இரண்டாவதாக, "குற்றங்கள்" என்ற சொல்லுக்குப் பதிலாக "பன்னாட்டு குற்றங்கள்" (International Crimes) என்ற பதம்பயன்படுத்தப்பட வேண்டும். மூன்றாவதாக, ICC மட்டுமல்லாது ICJ-யையும் வலியுறுத்த வேண்டும். ஏனெனில், ஒரு அரசை நேரடியாகப் பொறுப்பேற்க வைக்கும் நீதிமன்றம் ICJ ஆகும். நான்காவதாக, இனப்படுகொலை முதன்மை குற்றமாக வலியுறுத்தப்பட வேண்டும்.

இந்த ஆலோசனைகள் புறக்கணிக்கப்பட்ட நிலையில், 56 வடக்கு-கிழக்கு முக்கியஸ்தர்களின் கையெழுத்துடன் புதிய கடிதம் தயாரிக்கப்பட்டு ஐ.நா. மனித உரிமை பேரவைக்கு அனுப்பப்பட்டது. அப்போது தான், இவ்வாறான முயற்சிகளை தனி நபர்களால் அல்ல, ஒரு உறுதியான சிவில் சமூக அமைப்பின் ஊடாக மேற்கொள்ள வேண்டிய அவசியம் தெளிவானது. அதிலிருந்துதான் ETRA உருவானது.

**கேள்வி :**

**2009க்குப் பிறகு ஏற்பட்ட சோர்வான சூழலில், இந்த அமைப்பு எவ்வாறு நம்பிக்கையை உருவாக்குகிறது?**

**பதில் :**

2009க்குப் பிறகு, நிலத்திலும் புலத்திலும் ஈழத் தமிழ் மக்கள் கடும் மனச்சோர்வுக்கு உள்ளானார்கள். எங்களுக்கானஅரசியல் பாதைகள் அனைத்தும் முடக்கப்பட்டு விட்டதாகப் பலர் எண்ணினர். சிலர் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கொண்டார்கள்.



ஆனால் இந்த 16 ஆண்டுகள் கடந்த பின்னரும், இப்போது ETRA போன்ற ஒரு அமைப்பு உருவாகியுள்ளது என்பது ஒருபுதிய பாதை திறக்கப்பட்டுள்ளதற்கான அறிகுறி. இந்த அமைப்பு, நிலத்திலும் புலம்பெயர்ந்த சமூகத்திலும் உள்ள ஈழத்தமிழர்களை ஒன்றிணைக்கும் பாலமாக இருக்கிறது. நாங்கள் தனித்தனியாக இல்லை. ஒன்றாக இணைந்தால் வலிமை பெற முடியும் என்ற நம்பிக்கையையே இது மீண்டும் உயிர்ப்பிக்கிறது.

**கேள்வி :**

**உலக அரசியல் சூழலில் ஆதரவு இல்லாத நிலையில் இலக்கை அடைய முடியும் என்று நம்புகிறீர்களா?**

**பதில் :**

நிச்சயமாக நம்புகிறேன். உலக அரசியலில் உண்மை என்னவென்றால், வலிமையே முடிவுகளை தீர்மானிக்கிறது. நாம் எண்ணிக்கையில் குறைவான இனமாக இருந்தாலும், தந்திரோபாயமாக ஒன்றிணைந்து செயல்பட்டால் அந்தவலிமையை உருவாக்க முடியும்.

பூகோள அரசியலில் இலங்கையின் அமைவிடம் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அந்த அமைவிடத்தில் வாழும் மக்கள் ஈழத்தமிழர்கள். ஆகவே அந்த இடத்தின் அரசியல் வலிமை நமக்கும் உரியது. நிலத்துக்கும் புலத்துக்கும்இடையிலான உறுதியான இணைப்பின் மூலமாக, இந்த வலிமையை சரியான நேரத்தில் சரியான முறையில்பயன்படுத்த முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்குள்ளது.

**கேள்வி :**

**பிரகடனத்தை "ஜீரோ டிராப்ட்" முறையில் வெளியிட்டதன் நோக்கம் என்ன?**

**பதில் :**

இந்தப் பிரகடனம் ஒரு தனிநபர் முயற்சி அல்ல. இது மக்கள் ஆவணம். அதனால், முதலில் "ஜீரோ டிராப்ட்" எனப்படும் ஆரம்ப வரைவு தயாரிக்கப்பட்டது. பின்னர் அது பேராசிரியர்கள், சட்ட நிபுணர்கள், பன்னாட்டு வல்லுநர்கள் உள்ளிட்ட பலருடன் கலந்துரையாடப்பட்டு தொடர்ந்து திருத்தப்பட்டது.

இது ஐ.நா. தீர்மானங்கள் தயாரிக்கப்படும் முறையைப் போலவே அமைந்தது. இறுதி ஆவணத்தை மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும். தேசத்தின் கடைக்கோடியில் வாழும் ஒரு சாதாரண ஈழத்தமிழனுக்கும், ஒரு அரசியல் தலைவனுக்கும் சம உரிமை உண்டு என்பதே இதன் அடிப்படை நோக்கம்.

**கேள்வி :**

**புலம்பெயர்ந்த தமிழர்களிடம் இருந்து நீங்கள் எதிர்பார்க்கும் பங்களிப்பு என்ன?**

**பதில் :**

"யார் ETRA?" என்றால், என் பதில் மிகவும் தெளிவானது: நீங்களும் ETRA தான். புலம்பெயர்ந்த ஒவ்வொரு ஈழத்தமிழரும் இந்த அமைப்பின் அங்கமாக இருக்க வேண்டும்.

பங்களிப்பு என்பது பண உதவி மட்டுமல்ல. கருத்து கூறுதல், திருத்தம் முன்வைத்தல், விவாதித்தல், இந்த ஆவணத்தை மற்றவர்களிடம் கொண்டு சேர்த்தல் ஆகிய அனைத்துமே பங்களிப்புகளே. இந்தப் பிரகடனத்தை மக்கள் குரலாக மாற்றுவதே எங்களின் பிரதான நோக்கம்.

**கேள்வி :**

**அடுத்த கட்ட நடவடிக்கைகள் என்ன?**

**பதில் :**

மார்ச் 15ஆம் திகதிக்குள் இந்தப் பிரகடனம் இறுதி வடிவம் பெறும். அதன் பின்னர் அது பன்னாட்டு அமைப்புகள், அரசுகள் மற்றும் பொறுப்புடைய தரப்புகளிடம் கையளிக்கப்படும்.

இனப்படுகொலைக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பொறுப்புடைய அனைத்து நாடுகளும் பொறுப்பு ஏற்க வேண்டும்என்ற கோரிக்கையும் இதில் வலியுறுத்தப்படும். அதே நேரத்தில், மாவட்ட மட்ட அமைப்புகள் உருவாக்கப்பட்டு, மக்கள் மையமாக செயல்படும் செயற்பாடுகள் தொடரும்.

**கேள்வி :**

**இந்தப் பயணத்தில் எதிர்ப்புகளையும் சவால்களையும் எவ்வாறு எதிர்கொள்வீர்கள்?**

**பதில் :**

எதிர்ப்புகள் தவிர்க்க முடியாதவை. பேரினவாத அரசின் அழுத்தங்களும், உள்ளக அரசியல் சுயநலங்களும்

தொடர்ச்சி: பக்கம் 08

**உயிரோடைத்தமிழ் வானொலிக்கு சிறீஞானேஸ்வரன் அவர்கள் அளித்த செவ்வியின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**



# மாகாணசபைத் தேர்தலை ஆராய நாடாளுமன்றக் குழு தயார்..!



மாகாண சபைத் தேர்தல்களுக்குப் பயன்படுத்தப்படும் தேர்தல் முறைமை குறித்து ஆராய்ந்து, அதற்கு தேவையான முன்மொழிவுகள் மற்றும் பரிந்துரைகளை சமர்ப்பிக்க விசேட நாடாளுமன்றக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த குழு அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் செயல்படும் என்று சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்ரமரத்ன நேற்று (20/02/2026) நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

**அந்த குழு விபரம்:**

1. **அமைச்சர் விஜித ஹேரத், தலைவர். தேசியமக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் கம்பகா.**
2. **ரஞ்சித் மத்தும பண்டார, ஐக்கிய மக்கள் சக்தி பா.உ, மொனராகலை**
3. **மனோ கணேசன், ஐக்கிய மக்கள் சக்தி தேசிய பட்டியல் பா.உ.**
4. **சுனில் வட்டகல, தேசிய மக்கள் சக்தி, பிரதி அமைச்சர், கொழும்பு.**
5. **லக்ஸ்மன் நிபுனாராச்சி,தேசிய மக்கள் சக்தி பா.உ, கொழும்பு.**
6. **இரா சாணக்கியன், இலங்கை தமிழ் அரசுக்கட்சி, பா.உ, மட்டக்களப்பு.**
7. **திருமதி சமன்மலீ குணசிங்க, தேசியமக்கள் சக்தி, பா.உ, கொழும்பு.**
8. **முனீர் முலாஃபர், தேசிய மக்கள் சக்தி பிரதி அமைச்சர் அம்பாறை.**
9. **அருண் ஹேமச்சந்திர, தேசியமக்கள் சக்தி பிரதி அமைச்சர், திருகோணமலை.**
10. **தர்மப்பிரிய விஜேசிங்க, தேசிய மக்கள் சக்தி பா.உ, கம்பகா,**
11. **சந்தன சூரியாராச்சி, தேசிய மக்கள் சக்தி பா.உ.கொழும்பு.**
12. **நிசாம் காரியப்பர் ஐக்கிய மக்கள் சக்தி தேசிய பட்டியல் பா.உ. ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.**

இந்த குழு மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு தற்போதுள்ள சட்ட மற்றும் நடைமுறைத் தடைகளை நீக்கி மிகவும் பொருத்தமான தேர்தல் முறையை அடையாளம் காண்பதே இந்தக் குழுவின் முக்கிய நோக்கமாகும்.



03 மாதங்களில் அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டும் அதாவது 20/02/2026 தொடக்கம் 20/05/2026 வரை ஆராய்ந்து அறிக்கை சமர்பித்தபின்னர் அந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்பித்து மாகாணசபை தேர்தல் தொடர்பான முடிவுகள் அறிவிக்கப்படும்.

இதில் உள்ள எதிர்கட்சி தலைவர் சஜீத்தால் நியமிக்கப்பட்ட நால்வர், அல்லது ஐவர் மட்டுமே பழைய முறையில் தேர்தலை நடத்துமாறு ஒற்றைக்காலில் நிற்பார்கள். ஏனைய எட்டு ஆளும் தரப்பினர் அதனை ஏற்க மாட்டார்கள் என்பது தெளிவு.




அறிக்கையில் 12 உறுப்பினர்களும் பழைய முறையில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என முடிவுகளை எடுத்தால் சிக்கல் இன்றி பாராளுமன்றத்தில் ஏற்கனவே 2017 செப்டம்பர் 22 ல் நல்லாட்சி அரசில் எடுத்த தீர்மானத்தின் அடிப்படையிலான மாகாணசபை திருத்த சட்டம் இரத்து செய்யப்பட்டு 1988 ல் நிறைவேற்றப்பட்ட விகிதாசார தேர்தல் முறையில் மாகாணசபை தேர்தல் 09 மாகாணங்களுக்கும் ஒரே நாளில் அல்லது கட்டங்களாக நடத்தப்படுவதற்கான அங்கீகாரத்தை தேர்தல் ஆணைக்குழுவுக்கு நாடாளுமன்ற தீர்மானத்தை சபாநாயகர் அறிவித்தவுடன் தேர்தல் நடத்தும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு மட்டுமே உண்டு.



ஏற்கனவே 2023 மே 27ல் பாராளுமன்ற உறுப்பினர் எம் ஏ சுமந்திரனாலும் 2025 ஜூலை 24 மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினராலும் பழைய விகிதாசார முறையில் மாகாணசபை தேர்தல் நடத்தப்பட வேண்டும் என தனிநபர் பிரேரணைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அந்த பிரேரணையில், “2017ஆம் ஆண்டு செப்டம்பர் 21ஆம் திகதியன்று வலுவிலிருந்த 1988ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் 2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்கச் சட்டத்தினால் அதற்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் எவ்வாறிருப்பினும் 2017 செப்டம்பர் 22ஆம் திகதியிருந்து நடைமுறைக்கு வருகின்ற திகதி வரைக்குமான காலப்பகுதியின்போது செய்யப்பட்ட ஏதேனும் செயலுக்குப் பங்கமின்றி அத்தகைய செயல் 1988ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு இச்சட்டம் வலுவுக்குவருகின்ற திகதியிலிருந்து பயனுறுவதாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

— பா.அரியநேத்திரன்

இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களாலும் இரண்டு கட்டங்களில் வழங்கப்பட்ட தனிநபர் பிரேரணைகளை கடந்த கால ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கமோ, தற்போதய ஜனாதிபதி அநுர குமார திசநாயக்காவின் அரசாங்கமோ கணக்கில் எடுக்கவில்லை. இரண்டு பிரேரணைகளும் குப்பைத்தொட்டியில் போடப்பட்டன.




நல்லாட்சி அரசில் 2017 ல் மாகாணசபை தேர்தலுக்கு பொறிவைத்து புதிய நடைமுறையுடன் கலப்பு தேர்தல் முறை, மற்றும் புதிய எல்லை நிர்ணயம் செய்யப்பட்ட பின்னரே மாகாணசபை தேர்தல் என்ற சட்ட திருத்த ஆலோசனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய போது அதற்கு ஆதரவாக தமிழ்தேசிய கூட்டமைப்பு உட்பட சகல கட்சிகளும் தலையாட்டி சட்டத்தை நிறைவேற்றியிருந்தனர்.

2020 நாடாளுமன்ற தேர்தலுக்கு பின்னர்தான் தமிழ்தேசிய கூட்டமைப்பு மாகாணசபை தேர்தல் பழைய முறையில் நடத்துமாறு அழுத்தம் கொடுக்க தொடங்கியது. 2024 நாடாளுமன்ற தேர்தலுக்கு பின்னர் தமிழ்தேசிய கட்சிகளும், எதிர்கட்சிகளும் என்றும் இல்லாதவகையில் மாகாணசபை தேர்தல்கள் உடனே நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வருகின்றனர்.

இதில் இன்னொரு படி மேலே சென்று சர்வதேச இராஜதந்திரிகளுடனான சந்திப்பில் மாகாணசபை தேர்தலை நடத்துமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுங்கள் என தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகள் கெஞ்சும் நிலையும் அண்மையில் காணமுடிந்தது.

இதில் தென்னிலங்கை எதிர்கட்சிகள் மாகாண சபை தேர்தலை நடத்துமாறு வலியுறுத்துவதற்கான காரணம் தேசிய மக்கள் சக்தியின் ஆதரவைக் குறைத்து தமது பலத்தை நிரூபிக்கும் பலப்பரீட்சைக்காக இந்த தேர்தலை பாவிக்கப்பார்க்கிறார்கள்.

வடகிழக்கில் உள்ள தமிழ்தேசிய கட்சிகளும் உதட்டால் அதிகாரப்பரவலுக்காக மாகாணசபை தேர்தலை நடத்துமாறு கோரிக்கைவிட்டாலும் அவர்களும் பதவி ஆசை, முதலமைச்சர் ஆசை, கதிரை ஆசைக்காகவும் மாகாணசபை தேர்தலை நடத்துமாறு கோரிக்கை விடுகிறார்கள் என்பதில் உண்மை இல்லாமல் இல்லை.

• • •

# நெருக்கடிகளை எதிர்கொள்ளும் வடக்கு கிழக்கு மாகாண விவசாயிகள்!



மட்டு.நகரான்

வடகிழக்கு மாகாணங்கள் என்பது இயற்கையின் முழுமையான கொடையான மாகாணமாக உள்ளது. இயற்கையினை தமிழர்கள் தமது கடின உழைப்பினாலும் தமது சிறந்த திட்டமிடலினாலும் வாழ்வாதாரமாக மாற்றி வெற்றிகரமான பொருளாதாரத்தினை கட்டியமைத்து வந்திருக்கின்றார்கள்.

வடகிழக்கினைப்பொறுத்தவரையில் பாரியளவிலான தொழிற்சாலைகளையோ பாரியளவிலான முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களையோ பாரியளவிலான தொழில் பேட்டைகளை கொண்டிருக்காதபோதிலும் இலங்கையின் சிறந்த பொருளாதார கட்டமைப்பினைக்கொண்ட மாகாணமாக வடகிழக்கு மாகாணம் இருந்து வந்திருக்கின்றது.



இதன்காரணமாகவே இந்த நாட்டில் உள்ள பெரும்பான்மை சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளினால் வடகிழக்கு மாகாணம் தொடர்ச்சியாக இலக்குவைக்கப்பட்டது.ஒரு இனத்தின் இருப்பினை அழிக்கவேண்டுமானால் அவர்கள் மொழி மற்றும் பொருளாதாரத்தினை அழிப்பதன் மூலம் அவர்களின் இருப்பினை அழிக்கமுடியும் என்பதை உணர்ந்தே இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு எதிரான பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவந்தன.

வடகிழக்கு மாகாணத்தினை பொறுத்த வரையில் பொருளாதாரத்தின் அடித்தளமாக இருப்பது விவசாயமும் மீன்பிடியுமாகும்.இந்த இரு துறைகளும் தமிழ் மக்களின் இருப்பின் அடித்தளமாக இருந்துவரும் நிலையில் இந்த நாட்டில் இதனை இல்லாமல்செய்யும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்பட்டபோதிலும் தமிழ் மக்களின் சிறந்த திட்டமிடல் செயற்பாடுகளினால் தொடர்ச்சியாக வளர்ச்சியை நோக்கியே செல்லும் நிலையிருந்தது.



குறிப்பாக கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் கிழக்கு மாகாணத்தின் தமிழர்களின் பொருளாதாரம் மீன்பிடி,விவசாயம் என்பதே பிரதானமாக இருந்து வருகின்றது.இயற்கையின் அனைத்து வளங்களும் உள்ள தன் காரணமாகவே கிழக்கு மாகாணம் அதிகளவில் திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் இலக்குவைக்கப்படுகின்றது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் 1948ஆம் ஆண்டு தொடக்கம் அம்பாறையில் (அன்று மட்டக்களப்பு) கல்லோயா குடியேற்றம்,திருகோணமலையில் கந்தளாய், அல்லைக்குடியேற்றங்கள் முன்னெடுக்கப்பட்டன.இதன் மூலம் தமிழர்களின் இலட்சக்கணக்கான ஏக்கர் வளமான காணிகள் அபகரிக்கப்பட்டு அவற்றில் சிங்களவர்கள் திட்டமிட்டவகையில் குடியேற்றப்பட்டனர்.இன்றும் அம்பாறை மாவட்டத்தின் மல்வத்தை,வீரமுனை பகுதிகளில் காணிகளை இழந்த மக்கள் நீதிமன்றில் வழக்குகளை கொண்டுசென்றுகொண்டிருக்கும் நிலைமையே காணப்படுகின்றது.

தமிழர்களின் வாழ்வாதாரமும் பொருளாதாரத்தின் ஆணிவேராகவும் இருந்த விவசாயத்துறையினை அழிப்பதற்கு தீவிரமான செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டுவந்த அதேநேரம் கிழக்கு மாகாணத்தில் தமிழ் விவசாயிகளை புறக்கணிக்கும் வகையிலான செயற்பாடுகளையே தொடர்ச்சியாக சிங்கள பேரினவாத அரசுகள் முன்னெடுத்து வந்தன.

அதன்தாக்கங்கள் என்பது இன்றும் கிழக்கு மாகாணத்தில் தமிழ் விவசாய சமூகத்தினை கடும் பாதிப்பு நிலைக்கு கொண்டுசெல்லும் வகையில் அமைந்திருப்பதை உணரமுடிகின்றது.குறிப்பாக இந்த நாட்டில் பெரும்பான்மை சிங்கள மக்களின் வாழ்வியலையும் தொழில்முறைகளையும் வைத்தே அரசுகள் தீர்மானங்களை எடுப்பதனால் சிறுபான்மை மக்கள் தொடர்ந்து பாதிக்கப்படும் நிலையே காணப்படுவது இந்த நாட்டில் தொடர்ந்துவரும் வரலாறாகவே இருந்துவருகின்றது.



குறிப்பாக விவசாய நடவடிக்கைகள் தொடர்பில் இந்த நாட்டில் முன்னெடுக்கப்படும் தேசிய வேலைத் திட்டங்களும் தேசிய நிகழ்ச்சித்திட்டங்களும் பெரும்பான்மை சிங்கள மக்களை மட்டுமே கவனத்தில் கொண்டு முன்னெடுக்கப்படுவதன் காரணமாக கிழக்கு மாகாண தமிழ் விவசாயிகள் தொடர்ச்சியான பாதிப்புகளை எதிர்கொண்டுவருகின்றனர்.

இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு விவசாயம் பாரிய பங்களிப்பனை வழங்கிவருகின்றபோதிலும் தமிழ் மக்களின் விவசாயத்துறை தொடர்பில் இந்த நாட்டில் உள்ள அரசுகள் முழுமையான கவனம் செலுத்த தவறியமை அல்லது உதாசீனம் செய்கின்றமையே இந்த நாடு இன்னும் அரிசி கொள்வனவினை நம்பியிருக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைகாணப்படுகின்றது.

தமிழர்கள் மீதான காழ்ப்புணர்ச்சியும் அவர்களை அழிக்கவேண்டும் என்கின்ற மனப்பான்மையுமே இந்த நாடு இவ்வளவு பின்தங்கிய நிலையிலும் கடும்மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுவருகின்றமைக்கும்காரணமாகஅமைகின்றன.கிழக்கில்விவசாயத்துறைக்கு முழுமையான திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டு சரியான வழிகாட்டல்கள், சரியான தொழில்நுட்ப பங்களிப்புகள் வழங்கப்படுமானால் கிழக்கு மாகாணத்தில் பெறப்படும் நெல் மூலம் இந்த நாட்டின் அரிசி தேவையினை பூர்த்திசெய்யமுடியும் என்பதே விவசாயிகளின் நீண்டகால கோரிக்கையாக இருந்துவருகின்றது.

இலங்கையில் விவசாய நடவடிக்கைகளுக்கும் அறுவடை நடவடிக்கைகளுக்கும் தீர்மானிக்கப்படும் காலப்பகுதி சிங்கள மக்களின் விவசாயத்தினை மட்டுமே கருத்தில் கொள்ளப்படுகின்றது. தமிழர்கள் விதைப்பு காலம், அறுவடைக்காலம் வேறுபட்ட காலப்பகுதிகளில் இடம் பெறுவதனால் விவசாய நடவடிக்கைகாலப்பகுதிகளில் அரசாங்கத்தினால் வழங்கப்படும் நலத்திட்டங்களும் கொள்வனவு நடவடிக்கைகளும் சிங்கள மக்கள் மட்டுமே அதிகளவில் நன்மையினை அடைவதாக உள்ளது.

ஆனால் கிழக்கில் தமிழ் பேசும் விவசாயிகள் தொடர்ச்சியான பாதிப்புகளை எதிர்கொண்டுவரும் நிலைமையே அதிகளவில் இடம்பெறும் நிமையினை காணமுடிகின்றது.

அதிலும் கிழக்கு மாகாணத்தில் பெரும்போகத்தில் சுமார் 2இலட்சம் ஏக்கர் காணிகளில் விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டாலும் அவற்றிலிருந்து அறுவடைகளை விற்பனை செய்யமுடியாமல் விவசாயிகள் மிககுறைந்த விலைக்கு தனியார் வியாபாரிகளுக்கு விற்பனை செய்யும் நிலைமையே தொடர்ந்து இருந்துவருகின்றது.காரணம் இவர்கள் விவசாய அறுவடையினை முன்னெடுக்கும் காலப்பகுதிகளில் சிங்கள பகுதிகளில் கொள்வனவினை அரசாங்கம் முடிக்கும் நிலையில் தமிழர்களின் பகுதிகளில் கொள்வனவினை மேற்கொள்ளாத நிலையே தொடர்ந்து இருந்துவருகின்றது.



கடந்த ஆண்டு இறுதிப்பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயிகள் விதைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு கடந்த டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட கடுமையான மழைவெள்ளத்தினால் கடும் பாதிப்புகளை விவசாயிகள் எதிர்கொண்டனர்.பெருமளவான அழிவுகள் வெள்ளத்தினால் ஏற்பட்டன.சுமார் 40வீதமான விவசாய நடவடிக்கைகளே மிஞ்சும் நிலைமையேற்பட்டது.

பின்னர் அறுவடைக்கான காலத்தில் அறுவடைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் ஏற்பட்ட கடுமையான மழை காரணமாக அறுவடைசெய்யப்பட்ட நெல்லை பாதுகாக்கமுடியாமல் விவசாயிகள் கடுமையான பாதிப்பினை எதிர்கொண்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியொன்றில் உள்ள வீட்டில் அறுடைசெய்திருந்த நெல்லை ஒரு இடத்தில் வைத்துமூடிவைத்திருந்து மழை ஓய்ந்த பின்னர் திறந்து பார்த்தபோது நெல் முளைத்திருந்த நிலைமையினை காணமுடிந்ததாக அப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர். சுமார் 300மூடை நெல் இவ்வாறு அநியாயமாக சென்றுவிட்டதாக விவசாயி ஒருவர் தெரிவித்தார்.இதன்மூலம் பல இலட்சம் இழப்பு அந்த விவசாயிக்கு ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயிகளுக்கு அறுவடை காலத்தில் அறுவடைசெய்யும் நெல்லை உலர்த்துவதற்கும் அவற்றினை சேமித்துவைத்து விற்பனை செய்வதற்கும் இதுவரை காலமும் எந்தவித நடவடிக்கை களையும் இந்த நாட்டில் மாறிமாறி வந்த அரசுகள் செய்யவில்லை. இதன்காரணமாக சிங்கள அரசுகள் எதனை எதிர்பார்த்ததோ அது இலகுவாக நடக்கும் நிலைமைகள் இயல்பாகவே ஏற்படும் நிலைமையினை காணமுடிகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரையில் முறையான நீர்முகாமைத்துவ கட்டமைப்பு ஏற்படுத்தப்படவில்லை, முறையான நெல் உலர்த்துவதற்கான கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படவில்லை, முறையான களஞ்சியப்படுத்தப்படுவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை, நவீன தொழில்நுட்ப விடயங்கள் தமிழர் பகுதிகளில் மேற்கொள்வதற்கான எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.அரச நெல் சந்தைப்படுத்தல் சபையின் அலுவலகம் கூட கிழக்கில் இதுவரையில் திறக்கப்படாலும் ஒரு அலுவலகர் கூட நியமிக்கப்படாமலும் உள்ள மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் காணப்படுகின்றது.

விவசாயிகள் தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டு

தொடர்ச்சி: பக்கம் 18

# சிறுகைத்தொழிலும் தன்னிறைவுப் பொருளாதாரமும்

தொகுப்பு **வன்னியூர் கலா பாரதீ**



இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு முதுகெலும்பாக மலையகம் இருக்கின்றது.

அவ் மலையகத்தில் தேயிலை, இறப்பர் தெங்கு போன்ற பொருளாதாரப் பயிர்கள் எந்த அளவுக்கு நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புகின்றதோ,அதே அளவுக்கு தனிமனித பொருளாதார நிலையில் மிகச் சரிந்த நிலையையே கொண்டு இருக்கின்றது.

அங்கிருந்து பொருளாதாரத்தை மேம்படுத்த என்ன செய்யலாம்? என்று தீர்மானிக்காதவர்கள் இன்னும் அடிமட்ட வாழ்வில் திக்குத் திணறிக் கொண்டே இருக்கிறார்கள்.



அதே நேரம் மாற்றீடாக என்ன செய்யலாம் என்று சிந்தித்து செயற் பட்டவர்களும் இருக்கிறார்கள்.

அவர்கள் மத்தியில் ஒருவராக மலையகம் "அட்டபாகை" என்னும் வாழ்விடத்தை நிரந்தரமாகக் கொண்ட "சின்னத் தம்பி பிரபாகர்" என்பவர் தொழிலதிபராக அவர் கடந்து வந்த பாதையை.. இக்கட்டுரைத் தொகுப்பு முன்னிலைப் படுத்துகிறது.

பெரும்பாலும் மலையக மக்களின் வாழ்வாதார நிலை யாவரும் அறிந்ததே. அப்படிப்பட்ட ஏழ்மை நிலையில் உள்ள ஒரு குடும்பத்தில் பிறந்து, பாடசாலைக் கல்விக்குப் பின்னர் கலாசாலைக் கல்வியை தொடர முடியாமல் போகும் ஒரு மாணவனாகவே பிரபாகர் இருந்து இருக்கிறார்.


அதற்கு பின் நகர்ந்த காலங்களில் தனது வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக...

தலைநகராம் கொழும்புக்கு இடம் பெயர்ந்து சென்றார். அங்கே சப்பாத்து, தோற்பை, கைப்பை செய்யும் சிறுகைத் தொழிலைக் கற்று அதனை சிறிது காலம் தொழிலாகவே செய்த வண்ணம் இருந்திருக்கின்றார்.

பிற்பட்ட காலத்தில் மைத்துனரின் உதவியோடு சிலைகள் செய்யும் தொழிலில் ஈடுபட்டு அதனையும் முழுமையாக கற்றுத் தேர்ந்தார்.

நகர வாழ்க்கை பொருளாதார நிலையில் பாதிப்பை ஏற்படுத்த மீண்டும் அவருக்கு மலையகம் நிரந்தர வதிவிடம் ஆனது.

மறுபடியும் விட்ட இடத்தில் இருந்து வாழ்க்கையைத் தொடங்க வேண்டிய சூழ்நிலை. சிலைகள் செய்யும் திறனை நம்பி அதையே கையில் எடுத்தார். பலரது கேளிக்கைகள், வீண் பேச்சுக்கள் எதிர் மறைக் கருத்துக்கள் இவையெல்லாம் தாண்டி அவரது முயற்சி தொடர்ந்தது.



அப்போதைய காலம் வீட்டிலே சிலைகள் வைத்து வணங்கக் கூடாது என்ற மனநிலை மலையக மக்களிடம் இருந்தது. இந்த மன நிலையை மாற்ற எண்ணியதோடு... பிரபாகர் தான் கற்ற பாடசாலை தொடங்கி பல பாடசாலைகளுக்கு சரஸ்வதி பூஜை காலங்களில் பல கொலுப் பொம்மைகளை இலவசமாகக் கொடுத்து அறிமுகம் செய்து வைத்தார். சிலரது வீடுகளுக்குக் கூட இலவசமாக பொம்மைகளை அன்பளிப்பு செய்தார். நாளடைவில் அவர்களினது மன நிலை மாறியது.

அவரது சிற்பத்தொழில் உயர்வை எட்ட ஆரம்பித்தது. இன்று முப்பது ஆண்டுகள் கடந்து வடக்கு கிழக்கு எனப் பல மாவட்டங்களுக்கும் ஏற்றுமதி செய்வதோடு... புதிய புதிய பலவித சிலைகளைக் கண்டு பிடித்து வியாபார உத்திகளை மேற் கொண்டுள்ளதன் பயன் இத் தொழில் விருத்தி பெரும் மன நிறைவைத் தருகிறது.

இருநூறுக்கும் மேற்பட்ட சிற்ப அச்சுக்கள் கைவசம் உள்ளதாயும். காலத்தின் நிலையறிந்து பல சிற்பங்கள் காணமல் போவதாயும் அவர் சொல்கிறார்.

இன்றைய நிலையில் இத்தொழிலை எனது மனைவியும் பழகி அவரும் ஒரு சிற்பக் கலைஞராக எனக்கு பக்க பலமாக இருக்கிறார்.

எனது தொழில் நிலையத்தில் சிங்கள தமிழ் என்ற பாகுபாடின்றி பலரும் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். இதனால் சமூகத்தின் மத்தியில் எனக்கு நல்ல மதிப்பையும் சிற்பத் தொழில் பெற்றுத் தந்திருக்கின்றது. என்னைப் போல பலரும் முயற்சியை எடுத்து மேன் நிலையில் தன்னிறைவுப் பொருளாதாரத்தை அடைய வேண்டும் என்பதே எனது வேண்டுகோள் என்பதாக தனது கருத்தை பதிவு செய்தார்.

• • •

## உணவுக்காக வங்கிகளில் ... தொடர்ச்சி...

கண்டறிந்துள்ளது.

"அல்ஜசீராவின் தற்போதைய நிலைமை மிகவும் கவலையளிக்கிறது. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வேலைகளைக் கொண்டவர்கள் கூட வீடு, கார் வாங்குவதற்கு அல்ல, மாறாக உணவு வாங்குவதற்கு கடன் பெறுகிறார்கள் என்பதைக் காண்பது மிகவும் கவலை அளிக்கிறது" என்று அர்ஜென்டினா கிராண்டே நிறுவனத்தின் சமூகவியலாளரும் ஆராய்ச்சியாளருமான வயலெட்டா கரேரா பெரேரா, அறிக்கையின் ஆசிரியர்களில் ஒருவர் அல்ஜசீரா ஊடகத்திடம் தெரிவித்துள்ளார்.

2023 டிசம்பரில் பதவியேற்ற அர்ஜென்டினாவின் ஜனாதிபதி ஜேவியர் மிலே, பொதுச் செலவினங்களில் கடுமையான குறைப்புகளின் மூலம் அமெரிக்க நாணய இருப்புக்களை உருவாக்குவதன் மூலம் நிதி சமநிலையை அடைவதை அடிப்படையாகக் கொண்ட தனது சிக்கன பொருளாதாரத் திட்டம் பொருளாதாரத்தை உயர்த்தியுள்ளதாகவும், மில்லியன் கணக்கான மக்களை வறுமையிலிருந்து மீட்டுள்ளதாகவும் கூறுகிறார். சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு அவருக்கு உண்டு, அர்ஜென்டினாவின் வெளிநாட்டுக் கடன்களின் அதிகமாக இருந்தபோதிலும், 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளில் நான்கு சதவீத பொருளாதார வளர்ச்சியை அது கணித்துள்ளது.

அர்ஜென்டினாவில் பொருளாதார நடவடிக்கைகள் ஒட்டுமொத்தமாக அதிகரித்திருந்தாலும், வளர்ச்சி சீரற்றதாகவே உள்ளது. வங்கி மற்றும் விவசாயம் போன்ற துறைகள் வளர்ச்சியைக் கண்டன, ஆனால் உற்பத்தி மற்றும் வர்த்தகம் கூர்மையான சரிவைச் சந்தித்தன. தேவை குறைந்து வருவதால் பல தொழிற்சாலைகள் மற்றும் கடைகள் மூடப்பட்டன. குறிப்பாக உணவு நுகர்வு குறைந்து வருகிறது, சுயாதீன உணவு சில்லறை விற்பனையாளர்கள் 12.5 சதவீத சரிவை அறிவித்துள்ளனர்.

## சாகோஸ் தீவுகளை ... தொடர்ச்சி...

நடவடிக்கைகளிலிருந்து இங்கிலாந்து பாதுகாக்கும்.

அமெரிக்க வெளியுறவுத்துறை ஒப்பந்தத்திற்கு அதிகாரப்பூர்வ ஆதரவை வழங்கிய அடுத்த வாரம் விரைவில் மேல் சபைக்குத் திரும்புவதற்கான சட்டம் வரிசைப்படுத்தப்பட்டு வருவதாக மேலே மேற்கோள் காட்டப்பட்ட மூத்த அதிகாரி தெரிவித்திருந்தார். ஆனால் அந்த அதிகாரி வியாழக்கிழமை(19) மறுபரிசீலனை செய்யப்படும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளார்.

டியாகோ கார்சியாவை குத்தகைக்கு எடுப்பதன் மூலம் ஸ்டார்மர் "ஒரு பெரிய தவறு செய்கிறார்" என்று அமெரிக்க ஜனாதிபதி புதன்கிழமை தனது உண்மை சமூக தளத்தில் தெரிவித்திருந்தார்.

"இந்த நிலத்தை இங்கிலாந்திலிருந்து பறிக்கக் கூடாது, அது அனுமதிக்கப்பட்டால், அது நமது பெரிய கூட்டாளியின் மீது ஒரு களங்கமாக இருக்கும்". "நாங்கள் எப்போதும் இங்கிலாந்துக்காகப் போராடத் தயாராகவும் விருப்பமாகவும்உள்ளோம், ஆனால் அவர்கள் முன்வைக்கப்படும் பிற பிரச்சினைகளை எதிர்கொள்வதில் வலுவாக இருக்க வேண்டும். டியாகோ கார்சியாவை விட்டுக்கொடுக்காதீர்கள்!" என்று ட்ரம்ப் எழுதியுள்ளார்.

இங்கிலாந்து அமைச்சர் அலெக்ஸ் டேவிஸ்-ஜோன்ஸ், ட்ரம்பின் சமீபத்திய விமர்சனத்தை மீறி அரசாங்கம் தனது போக்கை மாற்றாது என்று வலியுறுத்தினார். மேலும் "நாடாளுமன்ற நேரம் அனுமதிக்கும் போது இந்த மசோதாவை மீண்டும் கொண்டு வருவோம், ஏனெனில் இது தேசிய பாதுகாப்பிற்கு ஒரு முக்கியமான மற்றும் முக்கியமான சொத்து" என்று ஸ்கை நியூஸிடம் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து கன்சர்வேடிவ் கட்சி மற்றும் நைகல் ஃபராஜின் சீர்திருத்த இங்கிலாந்து ஆகிய இரண்டிலும் உள்ள எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் திட்டங்களுக்கு எதிராக நிர்வாகத்திடம் வற்புறுத்தி வருகின்றனர். தெஹ்ரானின் அணுசக்தி திட்டம் குறித்த பேச்சுவார்த்தைகள் பலனளிக்கவில்லை என்றால், ஈரானுக்கு எதிராக பாதுகாப்பதில் இந்தோ-பசிபிக் பகுதியில் உள்ள தளம் முக்கியமானதாக இருக்கும் என்றும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

## அறிவார்ந்த அணுகுமுறை ... தொடர்ச்சி...

சவால்களாக இருக்கும். ஆனால் எங்களின் செயற்பாடுகளே எங்களின் பதில்.

சட்டத்தை மதித்து, தந்திரோபாயமாக, பொறுமையுடன் பயணிப்பதே எங்களின் வழி. கடந்த காலப் பிழைகளை மீண்டும் செய்யாமல், அவற்றிலிருந்து பாடம் கற்றுக் கொண்டு முன்னேறுவதே எங்களின் உறுதியான தீர்மானம்.

ETRA என்பது "நான்" மையமான அமைப்பு அல்ல. இது "நாங்கள்" என்ற அடையாளத்தின் வெளிப்பாடு. உலகம் முழுவதும் வாழும் ஈழத்தமிழர்கள் அனைவரும் இதன் பங்காளிகள்.

ஒற்றுமையுடனும் நம்பிக்கையுடனும் பயணித்தால், எங்களுடைய உரிமைகளையும் அரசியல் இலக்கையும் எட்டமுடியும் என்ற உறுதியுடன் இந்தப் பயணம் தொடரும்.

• • •

# கையெழுத்து போராட்டத்தால் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க முடியுமா..?

பா.அரியநேத்திரன்



பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவோம் என்று தேசிய மக்கள் சக்தியினால் 2024 ஆம் ஆண்டு தேர்தலில் வாக்குறுதியளிக்கப்பட்டது. அவ் வாக்குறுதி வழங்கப்பட்டமைக்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கொடூரங்களும், பாரதூரமான விளைவுகளும் காரணங்களாக இருந்திருக்க வேண்டும். அவையனைத்தும் எவ்வித மாறுதல்களும் இன்றி பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாப்பதற்கான சட்ட வரைபில் உள்ளடக்கப்பட்டுள்ளன.



ஜனநாயகத்திற்கு விரோதமாகவும், அடிப்படை மனித உரிமைகளைக் கேள்விக்கு உள்ளாக்கும் வகையிலும் தற்பொழுதும் வலுவிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கோர முகத்தினை நேரடியாக அனுபவித்த மக்கள் என்ற அடிப்படையில் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைபினை மீளப் பெறவும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை நீக்கவும், எந்தவொரு பயங்கரவாதத் தடுப்புச் சட்டமும் தேவையில்லை என்பதனையும் வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டம் தற்போது “பழசும் வேண்டாம், புதிசும் வேண்டாம்” என்ற தொனிப்பொருளில் வடகிழக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் உள்ள பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை விட தற்போது அரசினால் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மிக கொடூரமானது என மனித உரிமை ஆர்வலர்கள்,சட்டத்தரணிகள், கல்வியாளர்கள், என பலதரப்பட்டவர்கள் தெரிவித்துள்ளார்கள்.



பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் பற்றிய வரைவிலக்கணம் மிகவும் பரந்ததாக உள்ளதால் நபர் ஒருவர் எந்த குற்றம் செய்தாலும் அரசு அவரை கைது செய்யலாம்.

தற்போதுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் ஒருவரை கைது செய்து ஒரு வருடத்தின் பின் வழக்கு தொடுக்க விட்டாலும் கூட அவரை பிணையில் விடுவிக்கலாம். வரவுள்ள புதிய வரைபு சட்டம் ஒருவர் ஒரு வருடம் தடுப்பாணையில் தடுத்து வைக்கப்படலாம். மற்றும் தடுப்பு காவலில் வைக்கப்படலாம், ஆகையால் இரண்டு வருடங்களுக்கு பின்புதான் ஒருவரை பிணையில் விடுதலை செய்யலாம் என கூறுகின்றது.

ஆனால் இந்த படுமோசமான செயலை அறிந்தும் அரசு தரப்பு அமைச்சர்கள், ஜனாதிபதி, உட்பட எவருமே அதனை இல்லாமல் செய்ய எந்த ஒரு நடவடிக்கையினையும் இதுவரை எடுக்கவில்லை.

1979 ஜூலை 19 ம் திகதி இரவு 10.45, மணிக்கு பயங்கரவாத தடைச்சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

அன்று பி.ப.1, மணிக்கு மட்டக்களப்பு மாவட்டம் கல்குடா தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகவும், நீதி அமைச்சராகவும் இருந்த K.W.தேவநாயகம் அவர்கள் இந்த சட்டத்தை சமர்ப்பித்தார். தற்காலிகசட்டமாகவே சமர்பிக்கப்பட்டாலும் பின்னர் இது தொடர்ந்து 1982ல் நிரந்தர சட்டமாக நிறைவேற்றப்பட்டது. ஏறக்குறைய பத்து மணித்தியாலம் மட்டுமே விவாதம் இடம்பெற்று அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டது.

எதிர்கட்சியாக தமிழர் விடுதலை கூட்டணி 18 பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்கட்சி தலைவராக அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக்கூட்டணி 18 உறுப்பினர்களும் வாக்கெடுப்பில் இருந்து விலகி இருந்தனர்.

49வருடங்களாக இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தால் மிகவும் வதைபட்டு பாதிப்படைந்தவர்கள் இலங்கையில் தமிழர்களே. தற்போதும் இச்சட்டத்தால் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர், இன்னும் கைதுசெய்யப்படுகின்றனர்.

இந்த சட்டத்தை முற்றாக நீக்குமாறு சர்வதேச நாடுகளும், மனித உரிமை அமைப்புகளும் தொடர்ச்சியாக அழுத்தங்களை தெரிவித்தன.

தமிழரை கொண்டு பாராளுமன்றத்தில் நிறைவேறிய பயங்கரவாத தடைச்சட்டம் தமிழர்களுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட சட்டமாக இது அப்போது பலராலும் பேசப்பட்டது.

இந்த சட்டத்தை நிறைவேற்றிய பின்னர் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனா இராணுவ தளபதியாக அப்போது இருந்த பிரிகேடியர் ஐ.விஜயதுங்காவை 1979 ஜூலை 20ம் திகதி அழைத்து எதிர்வரும் 1979 டிசம்பர் 31ம் திகதிக்கிடையில் நாட்டில் உள்ள பயங்கரவாதத்தை வேரொடு களையுமாறு உத்தரவிட்டார்.

1977ல் வடகிழக்கில் உள்ள 18 தமிழ்தொகுதிகளில் தமிழர் விடுதலை கூட்டணி வெற்றியீட்டி வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கு அங்கீகாரம் வழங்கிய இந்த தேர்தலில் தான் முதன் முதலாக இலங்கை சரித்திரத்தில் தமிழர் ஒருவர் எதிர்கட்சி தலைவரானார்.



வடக்கு கிழக்கு மாகாணத்தில் வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கு அங்கீகாரம் வழங்காத ஒரேயொரு தேர்தல் தொகுதி மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா தொகுதியாகும். இந்த தொகுதியில் ஐக்கியதேசிய கட்சி சார்பில் போட்டியிட்ட K.W.தேவநாயகம் அவர்கள் வெற்றி பெற்றார். தமிழர் விடுதலை கூட்டணியை தோற்கடித்தமைக்காக அவருக்கு ஜே.ஆர்.ஜெயவர்தனா நீதி அமைச்சர் பதவியை பரிசாக வழங்கினார்.

அதே பதவியை வைத்து 1979 ஜூலை19ல் பயங்கரவாத சட்டத்தை அவரைக்கொண்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய ஜே.ஆர்.ஜெயவர்தனா சரியாக ஏழு மாதத்தால் K.W. தேவநாயகம் அவர்களிடம் இருந்த நீதி அமைச்சர் பதவியை பறித்தெடுத்து உள்ளூராட்சி அமைச்சராக 1980 பெப்ரவரி 14 ம் திகதி வழங்கினார்.

பயங்கரவாததடைச்சட்டத்தைநிறைவேற்றுவதற்கு மட்டுமே தமிழன்ஒருவனை நீதி அமைச்சராக ஐக்கிய தேசிய கட்சி அரசு நியமித்தது என்ற வரலாற்றும் இதில் உள்ளது.




ஏற்கனவே 1979ல் பயங்கரவாத தடைச்சட்டம் நிறைவேற்றப்பட்டு 2010 வரை மிக அதிக எண்ணிக்கையில் சித்திரவதைப்பட்டு கொலைசெய்யப்பட்டு சிறைகளில் வருடக்கணக்காக தடுத்து வைக்கப்பட்ட ஒரே இனம் என்றால்அது தமிழர்கள்தான்.

ஆனால் 2010க்கு பின்னர்தான் பயங்கரவாத தடைச்சட்டம் அரசாங்கத்தில் கடந்த காலங்களில் ஆட்சியில் அமைச்சர்களாக, முதலமைச்சர்களாக, பிரதி அமைச்சர்களாக, அதிகாரிகளாக ஏன் ஜனாதிபதிகளாக இருந்தவர்களுக்கும் இந்த கொடிய சட்டம் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

சிங்கள மக்களுக்கும் இந்த சட்டம் இப்போது அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் ஒட்டுமொத்த இலங்கையரும் இந்த சட்டத்தை இரத்துச்செய்வதற்கு அல்லது மாற்றீடாக வேறு சட்டங்களை நிறைவேற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவும் எதிர்கட்சிகளும் முனைப்பு காட்டி வருகின்றனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க கோரி ஏற்கனவே சில தடவைகள் கையெழுத்துப்போராட்டங்கள் நடத்திய வரலாறுகள் உண்டு. தமிழ்த்தேசிய கூட்டமைப்பு 2022 பெப்ரவரியில் வடகிழக்கு மற்றும் கொழும்பு, மலையகம்

தொடர்ச்சி: பக்கம் 19


# மலையக மக்களின் உழைப்பில் அடையாள அரசியல்

மருதன் ராம்

இலங்கைத் தீவின் பொருளாதாரத்தில் முக்கிய பங்காற்றுபவர்களாக இருக்கின்ற மலையகப் பெருந்தோட்ட சமூகம், கடந்த இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக பாரிய போராட்டங்களுக்கு மத்தியிலேயே தமது இருப்பைத் தக்கவைத்துள்ளது. அண்மையில் சிங்கள நாளிதழ் ஒன்றில் “கொழும்பில் கொத்து ரொட்டி அடிப்பவர்கள் அனைவரும் மலையகத்தவர்கள்” என்ற தொனியில் வெளியான செய்தி, ஒரு இனத்தின் உழைப்பை ஏளனம் செய்வதாகவும், அவர்களின் பொருளாதார இயலாமையைச் சுட்டிக்காட்டி சிறுமைப்படுத்துவதாகவும் அமைந்து பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.



கொழும்பில் உள்ள உணவங்களில் கடின உழைப்பை நல்கும் இளைஞர்களில் பெரும்பாலானோர் மலையகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது எதார்த்தமான உண்மை. ஆனால், இதை ஒரு “அடையாளமாகவோ” அல்லது “தாழ்நிலைத் தொழிலாகவோ” சித்தரிக்க முற்படுவதில்தான் சிக்கல் உள்ளது. குறித்த நாளிதழ் செய்தி, மலையக இளைஞர்கள் கல்வியறிவின்மையாலோ அல்லது வேறு வழியின்றியோ இத்தொழிலுக்கு வருவதாக மறைமுகமாகச் சித்திரித்தது. இது சமூக வலைத்தளங்களில் கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டது. இதேபோன்ற கருத்துக்கள் கடந்த காலங்களில் தென்னிலங்கை அரசியல்வாதிகளாலும், சில உயர்வர்க்கத்தினராலும் முன்வைக்கப்பட்டன. “மலையக மக்கள் தோட்டங்களுக்குள்ளேயே இருக்க வேண்டும்” என்ற மறைமுக ஆதிக்கப் போக்கு இதன் பின்னால் உள்ளது.



குறிப்பாக சில ஆண்டுகளுக்கு முன்னர் சமூக ஊடக செயற்பாட்டாளரான சேபால அமரசிங்க தனது வலையொளி (YouTube) பக்கத்தில் காணொளி ஒன்றை வெளியிட்டு, “கொழும்பில் உள்ள ஹோட்டல்களில் கொத்து ரொட்டி அடிப்பவர்கள் அனைவரும் மலையகத்தைச் சேர்ந்தவர்கள்” என்ற ரீதியிலும், மலையக மக்களின் பின்னணி மற்றும் அவர்களின் தொழில் சார்ந்து அவமதிக்கும் வகையிலும் சில கருத்துக்களை வெளியிட்டிருந்தார். இதற்கு மலையக அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

எவ்வாறாயினும் தமது கருத்துக்கு மன்னிப்பு கோரி சேபால அமரசிங்க காணொளி ஒன்றை வெளியிட்டார். அதேபோன்று கடந்த 2024ஆம் ஆண்டு தற்போது அமைச்சராக உள்ள கே.டி.லால் காந்தவும் இவ்வாறானதொரு கருத்தை வெளியிட்டதுடன் அதுவும் பேசுபொருளானது. மலையக இளைஞர்கள் தோட்டங்களை விட்டு வெளியேறி நகரங்களுக்கு வேலைக்குச் செல்வதை, பெருந்தோட்ட நிறுவனங்கள் ஒரு நஷ்டமாகவே பார்க்கின்றன. ஏனெனில், மலிவு உழைப்பு கையை விட்டுப் போவதை அவர்கள் விரும்புவதில்லை. எனவேதான், இத்தகைய ஊடகப் பிரச்சாரங்கள் மூலம் அந்த இளைஞர்களின் கௌரவம் சீண்டப்படுகிறது. தற்போது இந்த விடயம் பேசுபொருளாக மாறியதில் அண்மையில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான சம்பளம் அதிகரிக்கப்பட்டமை முக்கிய காரணமாக அமைகிறது.



## அண்மைய சம்பள உயர்வு: ஓர் அரசியல் நாடகம்?

நீண்ட போராட்டங்களுக்குப் பிறகு, மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்தச் சம்பளம் 1750 ரூபாயாக சில நிபந்தனைகளுடன் அதிகரிக்கப்பட்டது. ஆனால், இந்த சம்பள உயர்வின் பின்னணியில் கசப்பான உண்மைகள் பல உள்ளன. 1750 ரூபாய் என்பது முழுமையான அடிப்படைச் சம்பளம் அல்ல. இதில் அடிப்படைச் சம்பளம், வரவுச் சலுகை மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் அடங்கும். நாட்டின் தற்போதைய பணவீக்கத்துடன் ஒப்பிடும்போது, இந்த உயர்வு போதுமானதாக இல்லை.

சம்பளத்தை உயர்த்திய தோட்ட நிறுவனங்கள், அதற்கு ஈடாக நாளாந்தம் பறிக்க வேண்டிய கொழுந்தின் அளவை அதிகரித்துள்ளதாக மலையக தொழிற்சங்கங்கள் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளன. தேயிலை கொழுந்து விளைச்சல் அதிகமாக உள்ள காலப்பகுதியில் இது சாத்தியமான ஒன்றாக இருந்தாலும் விளைச்சல் குறைவாக இருக்கின்ற காலப்பகுதியில் இது மிகவும் சவாலான ஒரு விடயமாக மாறுகிறது.

அதேநேரம் இந்தச் சம்பள உயர்வு குறித்து சமூக ஆர்வலர்கள் மற்றும் பொருளாதார நிபுணர்களும் முக்கிய விமர்சனங்களை முன்வைக்கின்றனர். பல நிறுவனங்கள் 1700 ரூபாய் என்ற சம்பள உயர்வை வழங்க மறுத்ததுடன், நீதிமன்றம் வரை சென்று முட்டுக்கட்டை போட்டன. இந்த பின்னணியில் தற்போதைய சம்பளம் உயர்த்தப்பட்ட பிறகு, பல தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் வேலை நாட்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. இதனால் மாத இறுதியில் அவர்கள் கையில் கிடைக்கும் மொத்தத் தொகை பழைய அளவிலேயே உள்ளது என்ற விமர்சனங்கள் உள்ளன.

முறையான ஓய்வூதியத் திட்டங்களோ அல்லது மருத்துவக் காப்பீடுகளோ இன்றி, வெறும் நாளாந்தக் கூலியை உயர்த்துவது நிரந்தரத் தீர்வாகாது. இந்த விமர்சனங்களுக்கு மத்தியில் ஹோட்டல் தொழில் குறித்து சிங்கள ஊடகம் வெளியிட்ட கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. மலையக இளைஞர்கள் ஹோட்டல் வேலைகளுக்குச் செல்வதை நாம் ஊக்குவிக்க வேண்டிய அவசியமில்லை.



ஆனால், அங்குள்ள பொருளாதார எதார்த்தத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். கொழும்பில் உள்ள ஒரு ஹோட்டலில் வேலை செய்யும் இளைஞனுக்கு நாளாந்தம் குறைந்தது 2500/- ரூபாய் வேதனமாகக் கிடைக்கிறது. அதோடு, தங்குமிடம் மற்றும் மூன்று வேளை உணவு இலவசமாக வழங்கப்படுகிறது. மறுபுறம், அண்மையில் அதிகரிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் சம்பளத்தில் வெறும் 400/- ரூபாய் மட்டுமே கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது. அதிலும் 200/- ரூபாய் தற்காலிகமான ஒரு கொடுப்பனவு மட்டுமே. வெறும் 400 ரூபாய்க்காக ஒரு இளைஞன் தனது சுதந்திரமான நகர வேலைவாய்ப்பையும், அதிக வருமானத்தையும் விட்டுவிட்டு, மீண்டும் தோட்டத்தின் கங்காணிகளிடமும், லயத்துத் துயரங்களோடும் வாழத் திரும்புவான் என்று எதிர்பார்ப்பது பொருத்தமற்ற ஒன்றாகும். மறுபுறம் சம்பள உயர்வின் தாக்கம் மலையக அரசியலிலும் பதிவாகியுள்ளது. மலையக அரசியல் வரலாற்றில் தற்போதைய காலம் ஒரு இருண்ட காலமாகக் கருதப்படுகிறது.

கடந்த காலங்களில் மலையகத் தலைமைகளை திறமையற்றவர்கள் என்று விமர்சித்திருக்கிறோம். ஆனால், அவர்கள் மீது ஒரு தார்மீகக் குற்றச்சாட்டு இருந்தா லும், அவர்கள் தமது கட்சியை வளர்ப்பதிலாவது அல்லது ஒரு குறைந்தபட்ச பேரம் பேசும் சக்தியையாவது வைத்திருப்பதில் திறமையாக இருந்தார்கள். ஆனால் தற்போதைய தலைமைகளிடம் தீர்க்கமான கொள்கைகள் இல்லை. அரசாங்கத்திடம் பேரம் பேசும் வல்லமை இல்லை.



தொழிலாளர்களின் உரிமைகளை விட, தமது பதவிகளைத் தக்கவைப்பதிலேயே குறியாக உள்ளனர் என்ற விமர்சனமும் எழுந்துள்ளது. இந்தத் தலைமைத்துவ வெற்றிடம், எதிர்காலத்தில் மலையக சமூகத்தை இன்னும் மோசமான பொருளாதாரப் பள்ளத்தில் தள்ளக்கூடும் என்பது கசப்பான உண்மை. மலையக மக்கள் “கொத்து ரொட்டி அடிப்பவர்கள்” என எள்ளி நகையாடுபவர்கள், அந்த உழைப்பின் பின்னால் உள்ள வியர்வையையும், கண்ணீரையும் உணர்வதில்லை. தோட்டங்களில் நிலவும் அடிமைத்தனமான சூழலிலிருந்து வெளியேறத் துடிக்கும் இளைஞர்களுக்கு, அங்கேயே இருக்க வேண்டும் என அழுத்தம் கொடுப்பது அநீதியானது. முறையான நில உரிமை, கௌரவமான சம்பளம் மற்றும் அரசியல் உறுதிப்பாடு கிடைக்கும் வரை, மலையக இளைஞர்களின் இடப்பெயர்வு தொடரவே செய்யும். காலம் செல்லச் செல்ல, தற்போதுள்ள தலைமைகளின் இயலாமையும், திட்டமிடப்படாத சம்பள உயர்வுகளின் தோல்வியும் இன்னும் வெளிப்படையாகத் தெரியவரும்.

• • •

# 2026 தமிழக தேர்தல் அரசியல்:

# ஈழத்தமிழ் அரசியலும் தமிழக ஈழத்தமிழ் அகதிகளின் அரசியல் நிலையும்




## இலக்கின் ஆய்வுக் கட்டுரை

தமிழக அரசியல் வரலாற்றில் 2026-ம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டசபைத் தேர்தல் என்பது ஒரு சாதாரண ஆட்சி மாற்றத்திற்கான களம் மட்டுமல்ல; அது தமிழகத்தின் சமூக-அரசியல் கட்டமைப்பில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய ஒரு திருப்புமுனையாகக் கருதப்படுகிறது. குறிப்பாக, ஈழத்தமிழர் விவகாரம், அவர்களின் அரசியல் அபிலாஷைகள் மற்றும் தமிழகத்தில் தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகளின் எதிர்காலம் ஆகிய அம்சங்கள் இந்தத் தேர்தலில் முன்னெப்போதும் இல்லாத வகையில் ஒரு தீர்மானகரமான சக்தியாக உருவெடுத்துள்ளன. கடந்த நான்கு தசாப்தங்களாகத் தமிழக அரசியலில் ஈழத்தமிழர் பிரச்சினை என்பது ஒரு உணர்ச்சிபூர்வமான பேசு பொருளாக மட்டுமே இருந்து வந்த நிலையில், தற்போது அது கொள்கை ரீதியான விவாதமாகவும், அகதிகளின் வாழ்வாதார உரிமைகள் குறித்த சட்டப் போராட்டமாகவும் பரிணமித்துள்ளது.



தமிழகத்தில் தற்போதைய அரசியல் சூழலானது திராவிட முன்னேற்றக் கழகம் (திமுக) தலைமையிலான ஆட்சி, அதற்கு வலுவான சவாலாகத் திகழும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அதிமுக), மற்றும் வளர்ந்து வரும் தமிழ் தேசிய சக்திகளான நாம் தமிழர் கட்சி (NTK) மற்றும் புதிய வரவான தமிழக வெற்றிக் கழகம் (TVK) ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு பலமுனைப் போட்டியாக விரிவடைந்துள்ளது. இந்த அரசியல் துருவ முனைப்புக்கு மத்தியில், இலங்கையில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றம் மற்றும் சர்வதேச அளவில் ஈழத்தமிழர் விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை (UNHRC) எடுத்து வரும் நடவடிக்கைகள் ஆகியவை தமிழகத் தேர்தலிலும் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளன.

### தமிழக அரசியல் களம் 2026: கூட்டணிக் கட்டமைப்பும் ஈழத்தமிழர் நிலைப்பாடும்

2026-ம் ஆண்டு தேர்தலை நோக்கிய அரசியல் நகர்வுகள் தமிழகத்தில் மிகத் தீவிரமடைந்துள்ளன. பிப்ரவரி 19, 2026 அன்று தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை நேரில் சந்தித்து திமுக கூட்டணியை உறுதி செய்துள்ளார். இது ஆளும் கூட்டணியின் பலத்தை மேலும் அதிகரித்துள்ளது.

- **திமுக கூட்டணி (SPA)**

திமுக, காங்கிரஸ், விசிக, தேமுதிக, இடதுசாரிகள், மநீம, மதிமுக, ஐயுஎம்எல் ஆகிய கட்சிகள் இணைந்த இந்தக் கூட்டணி, 2026 தேர்தலில் 46% – 49% வரையிலான உத்தேச வாக்கு வங்கியை கொண்டதாக மதிப்பிடப்படுகிறது.

முக்கிய ஈழத்தமிழ் நிலைப்பாடாக, 89,000 ஈழத் தமிழ் அகதிகளுக்குக் குடியுரிமை வழங்குதல் மற்றும் பாஸ் போர்ட் விதிகளில் சிறப்பு விலக்கு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்னிறுத்துகிறது.

- **அதிமுக கூட்டணி (NDA-type)**

அதிமுக, பாஜக, பாமக (அன்புமணி), அமமுக ஆகிய கட்சிகள் அடங்கிய இந்தக் கூட்டணி, 38% – 41% உத்தேச வாக்கு வங்கியை பெற்றுள்ளதாக கணிக்கப்படுகிறது.
ஈழத்தமிழ் விவகாரத்தில், இரட்டைக் குடியுரிமை மற்றும் குடியுரிமைச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்துள்ளது.

- **தவெக – நாம் தமிழர் (TVK–NTK)**

விஜய் – சீமான் தலைமையிலான இந்த அணியமைப்பு, தனித்தனிப் போட்டி அல்லது உத்தேச அரசியல் புரிதல் என்ற வடிவில் நகர்கிறது. இவர்களின் வாக்கு வங்கி 10% – 15% வரையிலானதாக மதிப்பிடப்படுகிறது.

இவர்களின் முக்கிய அரசியல் கோடு, தனித்தமிழ் ஈழம் மற்றும் தமிழ் தேசிய இறையாண்மையை மையமாகக் கொண்ட மாற்று அரசியல் ஆகும்.

- **மற்றவை (சுயேச்சைகள் மற்றும் சிறு இயக்கங்கள்)**

சுயேச்சை வேட்பாளர்கள் மற்றும் சிறு அரசியல் இயக்கங்கள் சேர்ந்து 2% – 4% வாக்கு வங்கியை கொண்டுள்ளன. இவர்களின் நிலைப்பாடு பெரும்பாலும் மனிதாபிமான அடிப்படையிலான உதவிகள் மற்றும் குறுகிய பிராந்திய கோரிக்கைகள் சார்ந்ததாக உள்ளது.



பிப்ரவரி 19 அன்று திமுக கூட்டணியில் இணைந்த பிறகு பேசிய பிரேமலதா விஜயகாந்த், இந்தக் கூட்டணி 200-க்கும் மேற்பட்ட இடங்களை வெல்லும் எனத் தன்னம்பிக்கை தெரிவித்துள்ளார். அதே நேரத்தில், பிப்ரவரி 18 அன்று சீமான் தனது கட்சியின் 234 வேட்பாளர்களையும் பிப்ரவரி 21 அன்று திருச்சியில் நடைபெறும் மாநாட்டில் அறிமுகப்படுத்தப் போவதாக அறிவித்துள்ளார்.

### ஈழத்தமிழ் அகதிகள் விவகாரத்தில் முதலமைச்சரின் சமீபத்திய நகர்வு

தேர்தல் நெருங்கும் வேளையில், ஈழத்தமிழர் நலனில் திமுக அரசு காட்டும் அக்கறை மிக முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. பிப்ரவரி 15, 2026 அன்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஒரு முக்கியமான கடிதத்தை எழுதியுள்ளார். அதன் முக்கிய அம்சங்கள்:

தமிழகத்தில் 40 ஆண்டுகளுக்கும் மேலாக வசிக்கும் சுமார் 89,000 ஈழத்தமிழர்களின் சட்ட ரீதியான நிச்சயமற்ற நிலையை நீக்க வேண்டும்.




அவர்களில் 40 சதவீதத்தினர் இந்தியாவிலேயே பிறந்தவர்கள் என்பதால், அவர்களுக்குக் குடியுரிமை வழங்க 1986-ம் ஆண்டின் நிர்வாகத் தடைகளை நீக்க வேண்டும்.

பாஸ்போர்ட் மற்றும் விசா தேவைகளில் இருந்து அவர்களுக்கு விலக்கு அளித்து, மாவட்ட ஆட்சியர்களே குடியுரிமை வழங்க அதிகாரம் அளிக்க வேண்டும்.

இந்த நகர்வு, முகாம்வாழ் தமிழர்களிடையே திமுகவின் செல்வாக்கை அதிகரித்துள்ளதுடன், எதிர்க் கட்சிகளுக்குப் பெரும் அரசியல் நெருக்கடியையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆளும் கட்சியான திமுக, தனது “திராவிட மாடல்” ஆட்சியின் சாதனைகளை முன்னிறுத்தித் தேர்தலைச் சந்திக்கத் தயாராகி வரும் நிலையில், எதிர்க்கட்சிகள் ஈழத்தமிழர் விவகாரத்தில் திமுகவின் முந்தைய காலத் தவறுகளையும், தற்போது அகதிகள் நலனில் நிலவும் குறைகளையும் சுட்டிக் காட்டத் தொடங்கியுள்ளன.

கூட்டணிக் கணக்குகளில் ஈழத்தமிழர் விவகாரம் என்பது ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு விதமான பயனை அளிக்கிறது. திமுக தனது ஆட்சியில் “அகதிகள் முகாம்களை” “மறுவாழ்வு முகாம்கள்” எனப் பெயர் மாற்றம் செய்ததையும், வீடுகள் கட்டிக் கொடுத்ததையும் சாதனையாக முன்வைக்கிறது. அதிமுக, மத்தியில் பாஜகவுடன் கொண்டிருந்த உறவின் மூலம் ஈழத்தமிழர்களுக்கான உரிமைகளை மீட்டெடுப்பதாகக் கூறுகிறது. நாம் தமிழர் கட்சியோ, இவை அனைத்தையும் கடந்து “தமிழ் தேசியம்” என்ற ஒற்றை இலக்கை நோக்கி ஈழ விடுதலையைப் பிரதானமாகக் கொள்கிறது.

### தமிழக வெற்றிக் கழகம் (TVK) மற்றும் சீமானின் கொள்கை மோதல்

நடிகர் விஜய் தொடங்கியுள்ள தமிழக வெற்றிக் கழகம், 2026

தொடர்ச்சி: பக்கம் 12

## 2026 தமிழக தேர்தல் ... தொடர்ச்சி...

தேர்தலில் ஒரு முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. விஜய்யின் கொள்கை பிரகடனத்தில் "திராவிடமும் தமிழ் தேசியமும் எனது இரண்டு கண்கள்" எனக் குறிப்பிட்டது, தமிழக அரசியலில் ஒரு புதிய விவாதத்தைக் கிளப்பியுள்ளது. இதற்கு எதிர்வினையாற்றிய நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான், திராவிடமும் தமிழ் தேசியமும் முரண்பட்டவை என வாதிடுகிறார்.

சீமானின் கூற்றுப்படி, திராவிடம் என்பது தமிழ் அடையாளத்தைச் சிதைக்கும் ஒரு கருவியாகும். "ஈழத்தில் தமிழர்கள் கொல்லப்பட்டபோது திராவிடக் கட்சிகள் வேடிக்கை பார்த்தன; தமிழ் தேசியம் மட்டுமே அவர்களுக்காக வீதியில் இறங்கிப் போராடியது" என அவர் தனது உரைகளில் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். இந்த சித்தாந்த மோதல், குறிப்பாக ஈழத்தமிழ் ஆதரவு நிலைப்பாடு கொண்ட இளைஞர்களின் வாக்குகளைப் பிரிப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. விஜய் தனது உரைகளில் ஈழத்தமிழர் விவகாரம் குறித்து நேரடியான அரசியல் நிலைப்பாடுகளை இன்னும் முழுமையாக அறிவிக்காவிட்டாலும், அவரது கட்சியின் தேர்தல் அறிக்கையில் அகதிகள் நலன் மற்றும் குடியுரிமை குறித்த முக்கிய அறிவிப்புகள் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### ஈழத்தமிழ் அரசியல்: 2025-2026 காலப்பகுதியின் நிலவரம்

இலங்கையில் 2024-ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி (NPP) ஆட்சியைக் கைப்பற்றியது. இந்த ஆட்சி மாற்றம் ஈழத்தமிழர் அரசியலில் ஒரு தற்காலிக எதிர்பார்ப்பை ஏற்படுத்திய போதிலும், நடைமுறையில் அது ஏமாற்றத்தையே அளித்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் அரசியல் நகர்வுகள்



இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகள், சிதறிக் கிடந்த தமது பலத்தை ஒருங்கமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளன. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK) மற்றும் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணி (DTNA) ஆகியவற்றுக்கு இடையே 2025 டிசம்பரில் ஒரு முக்கியமான உடன்பாடு எட்டப்பட்டது.

**இந்த உடன்பாட்டின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:**

1. 2026 மாகாண சபைத் தேர்தல்: நீண்டகாலமாகத் தள்ளிவைக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல்களை 2026-ம் ஆண்டிற்குள் நடத்த இலங்கை அரசை வலியுறுத்துவது.
2. பொதுவான அரசியல் நிலைப்பாடு: தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க அனைத்துத் தமிழ் கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்படுவது மற்றும் தேசியப் பிரச்சினைக்கு ஒரு நிலையான தீர்வைத் தேடுவது.
3. இராணுவமயமாக்கலுக்கு எதிர்ப்பு: வடக்கு-கிழக்கில் தொடரும் இராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் புத்தமயமாக்கல் நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடுவது.

இருப்பினும், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி (TNPF), தற்போதுள்ள அரசியலமைப்புச் சட்டத்திற்குள் தீர்வுகளைத் தேடுவதை எதிர்க்கிறது. அவர்கள் ஒரு "முன்-அரசியலமைப்பு ஒப்பந்தம்" (Pre-constitutional Treaty) தேவை என வலியுறுத்துகின்றனர். இந்த முரண்பாடுகள் ஈழத்தமிழ் அரசியலில் ஒரு நீண்டகாலத் தீர்வை எட்டுவதில் சவாலாக உள்ளன.

### சர்வதேச அரங்கில் ஈழத்தமிழர் விவகாரம் (UNHRC 2025-2026)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் (UNHRC) இலங்கைக்கு எதிரான பொறுப்புக்கூறல் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 2025 செப்டம்பர் மற்றும் 2026 மார்ச் மாதங்களில் நடைபெறவுள்ள அமர்வுகளில் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்த அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட உள்ளன.

- பாலியல் வன்முறை மற்றும் சித்திரவதை: போர்க் காலத்திலும் அதற்குப் பிறகும் தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட பாலியல் வன்முறைகள் குறித்து ஐநா ஒரு விரிவான அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- பொருளாதார நெருக்கடி மற்றும் மனித உரி மைகள்: இலங்கையின் பொருளாதார வீழ்ச்சி தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேலும் பாதித்துள்ளதாகவும், இதற்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் UNHRC தீர்மானம் 60.1 வலியுறுத்துகிறது.

இலங்கை அரசு இந்தச் சர்வதேச அழுத்தங்களிலிருந்து தப்பிக்க "தேசிய நல்லிணக்கம்" என்ற முழக்கத்தைப் பயன்படுத்தினாலும், தமிழ் மக்களுக்கான உண்மையான அதிகாரப் பகிர்வு இன்னும் எட்டப்படவில்லை.

### தமிழகத்தில் ஈழத்தமிழ் அகதிகள்: வாழ்வாதாரமும் மறுவாழ்வுத் திட்டங்களும்

தமிழகத்தில் தங்கியுள்ள ஈழத்தமிழ் அகதிகள் ஒரு தற்காலிக வாழ்க்கையைத் தொடங்கி நான்கு தசாப்தங்கள் கடந்துவிட்டன. 1983-ல் தொடங்கிய அகதிகளின் வருகை, பல்வேறு அலைகளாகத் தொடர்ந்து, தற்போது தமிழகத்தில் ஒரு பெரிய சமூகமாக அவர்கள் உருவெடுத்துள்ளனர்.

**முகாம்களின் தற்போதைய நிலை மற்றும் உள்கட்டமைப்பு**

தமிழகத்தில் சுமார் 103 முதல் 107 வரையிலான மறுவாழ்வு முகாம்களில் 60,000-க்கும் மேற்பட்ட அகதிகள் வசிக்கின்றனர். இவர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்த மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசு 2021-ல் ரூ. 317.40 கோடி மதிப்பிலான ஒரு பெரும் நலத்திட்டத்தை அறிவித்தது. அரசின் நலத்திட்டங்கள் மற்றும் நிதி ஒதுக்கீடு குறித்த விவரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன:



- **வீடுகள் கட்டுமானம்**

இரண்டு கட்டங்களாக மொத்தம் 7,469 புதிய வீடுகள் கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்காக 2024–2026 காலகட்டத்தில் ரூ. 404.38 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **மாதாந்த உதவித்தொகை**

குடும்பத் தலைவருக்கு மாதம் ரூ. 1,500, குடும்ப உறுப்பினர்களுக்கு ரூ. 1,000, குழந்தைகளுக்கு ரூ. 500 வழங்கப்படும். இந்த உதவித் திட்டத்திற்காக ஆண்டுக்கு கூடுதலாக ரூ. 21.29 கோடி செலவிடப்பட உள்ளது.

- **உணவுப் பாதுகாப்பு**

ஒவ்வொரு நபருக்கும் மாதத்திற்கு 12 கிலோ விலையில்லா அரிசி வழங்கப்படுவதுடன், மலிவு விலையில் எண்ணெய் மற்றும் சர்க்கரை வழங்கப்படும். இதற்காக அரசால் ரூ. 19 லட்சம் கூடுதல் மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது.

- **கல்வி உதவி**

பட்டயப் படிப்புக்கு ரூ. 10,000, பட்டப்படிப்புக்கு ரூ. 12,000 உதவித்தொகை வழங்கப்படும். பொறியியல் படிப்புகளுக்கு முழுக் கல்விச் செலவும் அரசால் ஏற்றுக் கொள்ளப்படும். இந்தத் திட்டத்திற்கு 2024–2025ம் ஆண்டிற்கு ரூ. 2.34 கோடி உத்தேசமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

- **மகளிர் நலன்**

முகாம் தலைமைப் பெண்களுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்கப்படுவதுடன், சுயஉதவிக் குழுக்களுக்கு நிதி ஆதரவும் வழங்கப்படும். இதற்காக ரூ. 6.15 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



தமிழக அரசு இவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக உள்கட்டமைப்பு பணிகளில் அதிகக் கவனம் செலுத்தி வருகிறது. குறிப்பாக, திருப்பத்தூர் மாவட்டத்தின் மின்னூர் கிராமம் மற்றும் திருச்சியின் கொட்டப்பட்டு ஆகிய பகுதிகளில் அதிநவீன வசதிகளுடன் கூடிய தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

### முகாம் மற்றும் முகாம் சாரா அகதிகளின் சமூக-பொருளாதார வேறுபாடுகள்

தமிழகத்தில் வசிக்கும் ஈழத்தமிழ் அகதிகளை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். முகாம்களில் வசிப்பவர்கள் அரசின் நேரடி உதவியைப் பெறுகின்றனர், ஆனால் அவர்களின் நடமாட்டம் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றில் சில கட்டுப்பாடுகள் உள்ளன. முகாம்களுக்கு வெளியே வசிக்கும் சுமார் 35,000 முதல் 40,000 அகதிகள் பெரும்பாலும் நடுத்தர அல்லது உயர் பொருளாதாரப் பின்னணி கொண்டவர்கள்.

முகாம் சாரா அகதிகள் பெரும்பாலும் நகர்ப்புறங்களில் வசிப்பதுடன், கல்வி மற்றும் வணிகத் துறைகளில் சிறந்து விளங்குகின்றனர். எனினும், இவர்களுக்கு அரசு வழங்கும் இலவச அரிசி அல்லது மாதாந்திர உதவித்தொகை போன்ற பலன்கள் கிடைப்பதில்லை. இவர்களில் பலர் இந்தியக் குடியுரிமை பெறாததால், வெளிநாடுகளுக்குச் செல்வதற்கோ அல்லது இந்தியாவில் நிரந்தரச் சொத்துக்கள் வாங்குவதற்கோ சட்ட ரீதியான தடைகளை எதிர்கொள்கின்றனர்.

### குடியுரிமைப் போராட்டம்: சட்ட ரீதியான முன்னெடுப்புகளும் சவால்களும்

ஈழத்தமிழ் அகதிகளின் மிக முக்கியமான கோரிக்கையாக இருப்பது "இந்தியக் குடியுரிமை" அல்லது "நீண்டகால விசா" (LTV) ஆகும். 1955-ம் ஆண்டு இந்தியக் குடியுரிமைச் சட்டத்தின்படி, அகதிகள் "சட்டவிரோதக் குடியேறிகள்" எனக் கருதப்படுவதால் அவர்களுக்குக் குடியுரிமை வழங்குவதில் மத்திய அரசு தயக்கம் காட்டி வருகிறது.




**குடியுரிமை திருத்தச் சட்டம் (CAA) மற்றும் அதன் தாக்கம்**

2019-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட குடியுரிமைத் திருத்தச் சட்டம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளிலிருந்து வரும் மதச் சிறுபான்மையினருக்குக் குடியுரிமை வழங்க வழிவகை செய்தது. ஆனால், இதில் ஈழத்தமிழர்கள் சேர்க்கப்படாதது பெரும் விவாதத்தை ஏற்படுத்தியது.

அதிமுக தனது தேர்தல் அறிக்கையில் ஈழத் தமிழர்களையும் CAA-க்குள் சேர்க்க வேண்டும் என வலியுறுத்தி வருகிறது. மறுபுறம், திமுக அரசு CAA சட்டத்தையே எதிர்ப்பதுடன், ஈழத்தமிழர்களுக்குத் தடையற்ற குடியுரிமை வழங்க வேண்டும் எனக் கோரி வருகிறது. மத்திய அரசு அண்மையில் (2025 செப்டம்பரில்) வெளியிட்ட ஒரு அறிவிப்பின் மூலம், 2015-க்கு முன் வந்த ஈழத்தமிழ் அகதிகளுக்குப் பாஸ்போர்ட் விதிகளிலிருந்து விலக்கு அளித்துள்ளது. இது அவர்கள் மீது "சட்டவிரோதக் குடியேறிகள்" என்ற முத்திரை குத்தப்படுவதைத் தற்காலிகமாகத் தடுத்துள்ளது.

**நீதிமன்றங்களின் வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்ப்புகள்**

மத்திய மற்றும் மாநில அரசுகளின் கொள்கை முடிவுகளுக்கு அப்பால், இந்திய நீதித்துறை ஈழத்தமிழ் அகதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதில் முன்னணியில் உள்ளது. சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை கிளை வழங்கியுள்ள சில முக்கியத் தீர்ப்புகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

1. பிறப்பால் குடியுரிமை (Gokuleswaran Case): ஜூலை 1, 1987-க்கு முன்பு இந்தியாவில் பிறந்த அகதிக ளின் குழந்தைகள் இந்தியக் குடிமக்களே என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதன் மூலம் சுமார் 130 அகதிகள் உடனடியாகப் பாஸ்போர்ட் விண்ணப்பிக்கத் தகுதியுள்ளவர் களாகக் கண்டறியப்பட்டுள்ளனர்.
2. மனிதாபிமான அடிப்படையில் குடியுரிமை (Mathin & Kamaleswaran Case): இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தமிழர்கள், இலங்கையில் குடியுரிமை மறுக்கப்பட்டு இந்தியா திரும்பும்போது அவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் குடியுரிமை வழங்க மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
3. வேலைவாய்ப்பு உரிமைகள் (Thirukalyanamalar Case): எஸ்பிஐ வங்கியில் பணியாற்றிய ஒரு அகதிப் பெண்ணை குடியுரிமை இல்லை என்ற காரணத்திற்காகப் பணிநீக்கம் செய்தது சட்டவிரோதமானது என நீதிமன்றம் 2026 ஜனவரியில் தீர்ப்பளித்தது. "குடியுரிமை இல்லாதவர்கள் என்றாலும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள பிரிவு 14 (சமத்துவம்) மற்றும் பிரிவு 21 (வாழ்வுரிமை) ஆகியவற்றை அவர்கள் அனுபவிக்கத் தடையுமில்லை" என நீதிபதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

- **கோகுலேஸ்வரன் வழக்கு (2025 நவம்பர்)**

1987 ஆம் ஆண்டுக்கு முன் பிறந்தவர்களுக்கு பிறப்பால் குடியுரிமை உரிமை உண்டு என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

- **ஜி. திருகல்யாணமலர் வழக்கு (2026 ஜனவரி 23)**

அகதிகள் பணிநீக்கம் செய்யப்படுவதற்கு எதிராக அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு உண்டு என நீதிமன்றம் உறுதிப்படுத்தியது.

தொடர்ச்சி: பக்கம் 13

## 2026 தமிழக தேர்தல் ... தொடர்ச்சி...

- மதின் வழக்கு (2022 / 2026)
இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என தீர்ப்பில் குறிப்பிடப்பட்டது.

### 2026 தேர்தல் அறிக்கைகளும் ஈழத்தமிழர் வாக்கு வங்கியும்

தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழ் அகதிகளுக்கு இந்தியாவில் வாக்களிக்கும் உரிமை இல்லை என்றாலும், அவர்களை ஆதரிக்கும் "ஈழ ஆதரவு வாக்காளர்கள்" (Pro-Eelam Voters) தமிழகத்தின் அனைத்துத் தொகுதிகளிலும் பரவியுள்ளனர். குறிப்பாக, வட தமிழகம் மற்றும் கடலோர மாவட்டங்களில் இவர்களின் தாக்கம் அதிகம்.

**அரசியல் கட்சிகளின் வாக்குறுதிகள் (உத்தேசமாக)**

- திமுக: முகாம்களை நிரந்தரக் குடியிருப்புகளாக மாற்றுதல், மாணவர்களுக்கு உயர் கல்விக்கான நிதியை அதிகரித்தல் மற்றும் அகதிகள் மறுவாழ்வுக்கான மத்திய அரசின் நிதியைத் தொடர்ந்து கோருதல்.
- அதிமுக: இரட்டைக் குடியுரிமைக்கான சட்டப் போராட்டத்தை முன்னெடுத்தல், இலங்கை அரசால் கைது செய்யப்படும் தமிழக மீனவர்கள் மற்றும் ஈழத்தமிழர் நலனுக்காகத் தனித் துறை அமைத்தல்.
- நாம் தமிழர் கட்சி: தமிழ் தேசியம் என்ற அடிப்படையில் ஈழத் தமிழர் இறையாண்மையை உலக அளவில் கொண்டு செல்லுதல், அகதிகளுக்கு முழுமையான குடியுரிமை பெற்றுத் தருதல்.
- தமிழக வெற்றிக் கழகம்: சாதிவாரி கணக்கெடுப்புடன் ஈழத்தமிழர்களுக்கான விகிதாசார உரிமைகள் மற்றும் மனிதாபிமான அடிப்படையிலான கொள்கைகளை உருவாக்குதல்.

### தன்னார்வ அமைப்புகளின் (NGO) பங்கு மற்றும் மீள்குடியேற்ற விருப்பம்

மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்றத்திற்கான ஈழ அகதிகள் அமைப்பு (OfERR) போன்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அகதிகளிடையே ஒரு விரிவான ஆய்வை மேற்கொண்டன. அதில்:

- மூன்றில் ஒரு பகுதியினர் இந்தியாவிலேயே தங்கிவிட விரும்புகின்றனர் (முக்கியமாக இந்தியாவில் பிறந்த இளைய தலைமுறை).
- மூன்றில் ஒரு பகுதியினர் இலங்கைக்குத் திரும்பித் தமது பூர்வீக நிலங்களில் குடியேற விரும்புகின்றனர் (முதியவர்கள் மற்றும் நில உரிமையாளர்கள்).
- எஞ்சியவர்கள் இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலை சீரடைந்த பிறகு முடிவெடுக்கலாம் எனக் காத்திருக்கின்றனர்.

OfERR மற்றும் "Acted" போன்ற அமைப்புகள் 2025-26 காலப்பகுதியில் சுமார் 290 குடும்பங்களை இலங்கைக்குத் திரும்ப அனுப்பும் பணிகளை முன்னெடுத்துள்ளன. இலங்கை அரசு இவர்களை வரவேற்பதாகக் கூறினாலும், நில உரிமை மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றில் இன்னும் பல தடைகளை உருவாக்கி வருவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

### முடிவுரை: 2026-ன் சவால்களும் வாய்ப்புகளும்

தமிழகத்தின் 2026 சட்டமன்றத் தேர்தல் என்பது ஈழத்தமிழ் அரசியலைப் பொறுத்தவரை ஒரு புதிய திசையைத் தீர்மானிக்கப் போகிறது. ஒருபுறம் ஆளும் கட்சிகள் வழங்கும் நலத்திட்டங்கள் அகதிகளின் அன்றாட வாழ்க்கையைச் சீரமைக்கின்றன; மறுபுறம் தமிழ் தேசிய சக்திகளின் எழுச்சி அவர்களுக்கான அரசியல் அடையாளத்தைப் பேசுகின்றன. சர்வதேச அளவில் இலங்கைக்கு எதிரான மனித உரிமைப் போராட்டங்கள் வலுப்பெற்று வரும் சூழலில், தமிழகத்தில் அமையப்போகும் புதிய அரசாங்கம் ஈழத்தமிழர்களுக்கான ஒரு நிரந்தரத் தீர்வை மத்திய அரசுடன் இணைந்து எட்ட வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இந்தியக் குடியுரிமைச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வருவது அல்லது அவர்களுக்கு ஒரு சிறப்பு விசா முறையை அறிமுகப்படுத்துவது மட்டுமே நீண்டகாலத் தீர்வாக அமையும்.

தமிழகத்தில் வசிக்கும் ஈழத்தமிழ் இளைஞர்கள் தங்களை இந்தியாவின் அங்கமாகவே கருதுகின்றனர். அவர்களின் திறமையைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் உள்ள சட்டச் சிக்கல்களைக் களைவது அரசின் கடமையாகும். 2026 தேர்தல் என்பது இத்தகைய மனிதாபிமான மற்றும் அரசியல் கோரிக்கைகளுக்கான ஒரு வடிகாலாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

ஈழத்தமிழர் பிரச்சினையை வெறும் தேர்தல் அரசியலுக்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தாமல், ஒரு தேசிய இனத்தின் வாழ்வாதாரப் பிரச்சினையாகக் கருதிச் செயல்படும் கட்சிகளுக்கே 2026-ல் தமிழக மக்கள் தமது ஆதரவை வழங்கக்கூடும். இது தமிழக அரசியல் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்குவதற்கான வாய்ப்பாக அமையும்.

• • •

# 2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் –ஒரு அரசியல் பார்வை






2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. வழக்கம்போல் அரசியல் கட்சிகள் தங்களின் கூட்டணிகள், தேர்தல் கணக்குகள், வெற்றி வாய்ப்புகள் ஆகியவற்றை ஆராய்ந்து வருகின்றன. ஆனால் தேர்தலைப் பற்றி மக்களின் எதிர்பார்ப்பு என்ன என்பது மிக முக்கியமான கேள்வியாகும்.

உலகம் முழுவதும் மக்கள் தேர்தல் மூலம் தங்களின் பிரச்சினைகள் தீரும் என நம்புவது போலவே தமிழ்நாட்டு மக்களும் நம்புகின்றனர். இது இயல்பான ஒன்றாக இருந்தா லும், தமிழக அரசியல் களத்தில் மூன்று முக்கிய அரசியல் போக்குகள் தென்படுகின்றன:

1. **இந்துத்துவ தேசியவாதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாஜக – அதிமுக கூட்டணி**

2. **மாநில சுயாட்சியை முன்வைக்கும் திமுக கூட்டணி**

3. **போலி தமிழ் தேசிய அரசியலை முன்வைக்கும் நாம் தமிழர் போன்ற புதிய அரசியல் சக்திகள்**

இந்திய தேசியவாதம், மாநில உரிமை, தமிழ் தேசியம் ஆகிய மூன்று கோட்பாடுகள் தேர்தல் களத்தை சூடேற்றி வருகின்றன.

எப்ஸ்டீன் ஆவணங்கள் வெளியான பின் உலகளவில் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மீதான மக்களின் நம்பிக்கை கேள்விக்குறியாகியுள்ளது. அரசுகள் திரைக்கு முன்னால் மட்டுமல்ல, திரைக்குப் பின்னாலும் சக்திவாய்ந்த அமைப்புகளால் பாதிக்கப்படுகின்றன என்ற கருத்து வலுப் பெற்றுள்ளது. இதனால் ஜனநாயக அமைப்பின் உண்மை தன்மை குறித்து மக்கள் சந்தேகப்படத் தொடங்கியுள்ளனர்.

இந்த நிலையில் தமிழ்நாட்டில் நடைபெறும் தேர்தல் மக்களுக்கு என்ன தீர்வை வழங்கும் என்ற கேள்வி எழுகிறது. கடந்த காலங்களில் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை. நிகழ்காலத்திலும் அதே நிலை தொடர்கிறது. எதிர்காலத்திலும் மாற்றம் உறுதி என யாரும் கூற முடியாத நிலை உள்ளது.

புதிய அரசியல் கட்சிகள் தேர்தல் களத்தில் தோன்றினாலும், அது அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்துமா என்பது சந்தேகமே. அரசியலைப் பொது ரீதியில் இரண்டு வகையாகப் பிரிக்கலாம்:

### அதிகாரத்தைப் பெறும் அரசியல் மக்களுக்கான அதிகார அரசியல்

அதிகார அரசியல் மக்கள் மீது ஆட்சி செய்வதை நோக்க மாகக் கொண்டது. மக்களுக்கான அரசியல்

ஆதி சட்டவாளர்-தமிழ் நாடு

அரசு அதிகாரத்தை கேள்வி கேட்கும் நோக்கத்தைக் கொண்டது. தேர்தல் அரசியலில் ஈடுபடும் பலர் நல்ல நோக்கத்துடன் இருந்தாலும், அரசியல் அமைப்பின் இயல்பே மக்களை கட்டுப்படுத்தும் அமைப்பாக மாறும் அபாயம் உள்ளது.

மேலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் வாதிகள் மட்டுமல்ல, தேர்ந்தெடுக்கப்படாத நிர்வாக அதிகாரிகளும் மக்களின் வாழ்க்கையை நிர்ணயிக்கின்றனர். இதனால் முழு அரசியல் அமைப்பும் மக்கள் மீது அதிகாரத்தை செலுத்தும் கட்டமைப்பாகவே இயங்குகிறது.

தமிழ்நாட்டில் பல்வேறு கட்சிகள் மாநில சுயாட்சி, தமிழ் தேசியம், இந்திய தேசியம் போன்ற கோட்பாடுகளை முன்வைத்தாலும், தேர்தல் முடிவுகள் மக்களின் வாழ்வில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற உறுதி இல்லை. திமுக, அதிமுக போன்ற பாரம்பரிய கட்சிகளும், புதிய அரசியல் அமைப்புகளும், வெவ்வேறு மொழியில் பேசினாலும், நடைமுறையில் ஒரே அரசியல் பாதையில் நகரும் அபாயம் உள்ளது.

பாமக, விடுதலை சிறுத்தைகள் போன்ற கட்சிகள் கூட்டணிகளில் இணைந்து அரசியலில் பங்குபற்றினாலும், தேர்தல் அரசியலின் மைய நோக்கம் அதிகாரப் பங்கு என்பதே உண்மை. மக்களின் பிரச்சினைகளை முழுமையாக தீர்க்கும் அரசியல் சக்தி உருவாகாத நிலை தொடர்கிறது.

உலக வரலாறு காட்டுவது என்னவெனில், தேர்தலை மக்கள் இயக்கங்கள் ஒரு கருவியாகப் பயன்படுத்தியுள்ளன. சில விடுதலை இயக்கங்கள் தேர்தலை தங்களின் அரசியல் இலக்கை முன்னெடுக்கும் உத்தியாக பயன் படுத்தியுள்ளன. ஆனால் ஆட்சி அமைப்புகள் இப்படிப்பட்ட அணுகுமுறைகளை எளிதில் ஏற்காது.

இந்தப் பின்னணியில் 2026 தமிழ்நாடு தேர்தலைப் பார்க்கும்போது, இது அடிப்படை அரசியல் மாற்றத்தை உருவாக்கும் வாய்ப்பு குறைவு எனத் தோன்றுகிறது. தேர்தல் நடைபெற்றாலும், அரசியல் அதிகார அமைப்பு தொடரும். எனவே தேர்தலை ஒரு முழுமையான மாற்றத்தின் வாசல் எனக் கருதுவது அரசியல் எளிமைப்படுத்தலாகும்.

மக்களின் ஒற்றுமை, அரசியல் விழிப்புணர்வு, மக்களுக்கான அரசியல் அமைப்பு ஆகியவை உருவாகாமல் தேர்தல் வெற்றி-தோல்வி குறித்து பேசுவது பயனற்றதாகிவிடும். இந்த நிலையில், மக்களின் நலனை மையமாகக் கொண்ட வலுவான அரசியல் அமைப்பு உருவாகாத வரை தேர்தல் மாற்றத்தை உருவாக்காது என்பதே கசப்பான உண்மை.

• • •

# தமிழ் அறத்தின் விதை

## தமிழின் விழா

ஐக்கிய இராச்சியத்தில் தமிழர் கலை கல்வி நடுவம் தனது முதலாவது பரிசளிப்பு -மதிப்பளிப்பு விழாவை 15/02/2026 ஞாயிற்றுக்கிழமை அன்று கரோ பைரன் மண்டபத்தில் வெகு சிறப்பாக நடாத்தியது. இளம் தலைமுறையினரிடம் தமிழையும் கலையையும் பண்பாட்டையும் தேசியத்தையும் ஈழதேசவரலாற்றையும் விதைத்து விட வேண்டும் என்ற உயரிய கொள்கை இணைக்கப்பட்டே பரிசளிப்பு விழா நடைபெற்றது.



தமிழர் கலை கல்வி நடுவத்தின் இயக்குநர்கள், நிர்வாகிகள், உறுப்பினர்கள், இளையோர் என அனைவரும் இணைந்து முன்னெடுத்து காலை 8 மணிக்கு விழா ஆரம்பமானது. மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. வாழிட நாட்டுக்கொடி ,தேசியக்கொடி, நடுவத்தின் கொடி என்பன ஏற்றப்பட்டு அவற்றுக்கான எண்ணிம இசைஒலிகளும் இசைக் கப்பட்டன.



தேசியக்கொடியை திருமதி சாவித்திரி அத்து விதானந்தன் அவர்கள் தேசியப்பற்றுடன் ஏற்றி வைக்க நிர்வாகிகள், இளையோர், விருந்தினர்கள் தேச வணக்கம் செலுத்தியமை தேசியப்பற்றின் தாற்பரியத்தை அனைவருக்கும் உணர்த்துவதாக இருந்தது. சிறப்பு விருந்தினர்களாக புலவர் நல்லதம்பி சிவநாதன், திருமதி ரஜனி சிவநாதன் அவர்களும், திரு விசாகபதி பிரபாகரன், திரு ஸாம் பிரதீபன் - மெய் வெளி ஊடகர், கவிஞர் கந்தையா இராஜமனோகரன், கலாநிதி அகிலன், எழுத்தாளர் திருமதி சாவித்திரி அத்துவிதானந்தன் கலாநிதி பிரபாகரன் (போரியல் ஆய்வாளர் அருஸ்) ஆகியோர் வருகை தந்து கலந்து கொண்டமை பரிசளிப்பு விழாவை மேலும் மெருகேற்றியது.



மாபெரும் மண்டபத்தின் பிரமாண்ட அரங்கில் மாணவர்களுக்கான பரிசில்களும் பத்து வருடங்களுக்கு மேலாக பணியாற்றிய ஆசிரியர்களுக்கான மதிப்பளிப்பும் வழங்க எண்ணிம வழித் துணை கொண்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நான்கு இளம் அறிவிப்பாளர்களின் செவ்வழக்குத் தமிழ் அறிவிப்பு அணியானது பார்வையாளர்களை அரங்கம் நோக்கி ஈர்த்தது. இளம் அறிவிப்பாளர்களுடன் திருமதி துஷ்யந்தி திலீபன், திருமதி சுகந்தினி சிவகுமார் இருவரும் இணைந்து ஆசிரியர்களுக்கான அறிவிப்பையும் சிறப்பு விருந்தினர்களுக்கான அறிமுக தொகுப்புச் சொல்லியங்களையும் மதிப்பார்ந்து செய்தனர். ஐக்கிய இராச்சிய மெய்வெளித் தொலைக்காட்சி ஊடகத்தினர் விழாவை நேரலை செய்தனர்.

கடந்தஆண்டுநடைபெற்றதமிழ்மொழித்தேர்வில்



அதிதிறன் பெற்ற மாணவர்கள், தமிழ்த்திறன் போட்டியில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற மாணவர்கள், செங்காந்தள் கலைச்சமரில் வெற்றியிடங்களைப்பெற்ற மாணவர்கள்," பள்ளி செல்ல முன் குறள் கற்போம்" நிகழ்வு நிகழ்த்திய மாணவர்கள் என அணியணியாக அழகேற்றமாக பரிசில்கள் வழங்கப்பட்டன. பரிசளிப்புக்கு இடையிடையே சிறப்பு விருதினர்களின் சிறப்புரைகள், மாணவர்களின் பேச்சு, திருக்குறள், நடனம் என தனி நிகழ்வுகளும் இடம்பெற்றன.

எம் தேசத்தின் துயர் மிகு வரலாற்று வடுவாக பதிந்த யாழ்ப்பாண நூலக எரிப்பின் சாரம்சத்தை வில்லிசைக்கலை வடிவாக இன்பேட் தமிழ்ச் சோலை பாடசாலை மாணவர்கள் திறம்பட நிகழ்த்தி அடுத்த தலைமுறைக்கு செய்யவேண்டிய வரலாற்றுக் கடமையை அனைவருக்கும் நினைவுபடுத்தினர். மதிய நேரத்துக்குப்பின் ஆசிரியர்களுக்கான மதிப் பளிப்பு சிறப்பு விருந்தினர்களால் அளிக்கப்பட்டது. குழந்தைகள், சிறுவர்கள், இளையோர், ஆண்கள் பெண்கள், வயது மூத்தோர், சான்றோர், தமிழ் ஆர் வலர்கள், எனப் பலரும் வருகை தந்து இதனை ஒரு தமிழ்ச்சமூகத்துக்கான பொறுப்பான விழா என் பதனை உறுதியாக்கினர். 850ற்கும் மேற்பட்ட பரிசில்கள் பேரழகுப்பெறுமதியாய் வழங்கப்பட பெருவிழாவாகப் பெயர் பதித்தது.





தமிழர் கலை கல்வி நடுவத்தின் நிர்வாகப் பொறுப்பாளர் திரு விசயசிங்கம் இராதாகிரிதரன் அவர்கள் தலைமை உரையாற்றினார். நடுவத்தின் பாடசாலை நிர்வாகிகள், மாணவர்கள், பெற்றோர்களுக்கு மட்டும் தேவையான உரையாக அமையாது புலம்பெயர் தமிழ்ச்சமூகத்துக்கே நல் வழி சொல்லும் அதிலும் இன்றைய புலம்பெயர் தமிழர்கள் கருத்திற் கொள்ளவேண்டிய சமூகப்பொறுப்பு மிக்க உரையாக அமைந்து பார்வையாளர்களை சிந்திக்க வைத்தது. தமிழர் கலை கல்வி நடுவத்தின் கல்வித்துறைப் பொறுப்பாளர் திருமதி தங்கேஸ்வரி கெங்காதரன் அவர்கள் நடுவத்தின் அச்சாணியான தமிழ்க்கல்வியின் முக்கியத்துவம் கல்விக்கொள்கை, மற்றும் எதிர்கால கல்வி நடவடிக்கைகள் பற்றி முதன்மையுரையாற்றினார். நடுவத்தின் செயலாளர் திருமதி செல்வராஜினி சசிகரன் அவர்கள் நடுவத்தின் கடந்த செயற்பாடுகள், வருங்கால செயற்பாடுகள், புதியதிட்டங்கள், நோக்கங்கள், மொழிப் பற்று நோக்கிய நடுவத்தின் நகர்த்தல் என அகத்தியமான நடுவத்தின் இயக்க இலக்கு குறித்து உரையாற்றினார். தமிழர் கலை கல்வி நடுவத்தின் மூத்த தமிழ் ஆளுமையும் ஆசிரிய ஆலோசகருமான திருமதி பானுமதி மணிவாசகம் அவர்களுக்கு நிர்வாகப் பொறுப்பாளர் மற்றும் கல்விப்பொறுப்பாளர் இருவரும் இணைந்து சிறப்பு மதிப்பளிப்பு அளித்தனர்.



ஐக்கிய இராச்சியத்தில் இயங்கும் தமிழர் கலை கல்வி நடுவமானது தனியே தமிழ்க் கல்வியை மட்டும் விதைப்பதற்கு உதயமாகவில்லை . "தமிழே எங்கள் அறம்" என்ற முழக்கத்தை முன்னிறுத்தி தமிழ் மானுடம் கொண்ட அரண் அத்தனையும் தமிழ் அறமே, அதனையே நாம் எமது அடுத்த அடுத்த தலைமுறைக்கு விதைப்போம் என்ற மானுடக் கொள்கையுடன் இயங்குகின்றது.

மொழிக்கான போராட்டம், ஓர் இனத்துக்கான இருப்பு, பண்பாட்டுக்கான முனைப்பு, கலைகளுக்கான கனவு, ஈழதேசவரலாற்று மெய்ப்பாடு, தாய்த்தமிழ் வரலாற்று வேரையும் விருட்சத்தையும் கற்பித்தல் எனப் பல வழிகளிலும் தேசியப் பற்றுறுதி கொண்டு இயங்குகின்றது. தமிழர் கலை கல்வி நடுவமானது தேர்வுப்பிரிவு, தொழில்நுட்பப்பிரிவு, கலை பண்பாட்டுப்பிரிவு, நிகழ்வுப்பிரிவு, விளையாட்டுப்பிரிவு, வரலாற்று மீட்புப்பிரிவு, ஆசிரியர் நற்பணிக்குழாம் என பல உப பிரிவுகளை உள்ளடக்கி தமிழ்ச்சமூக பொறுப்பு மிகு அமைப்பாக இயங்கி வருகின்றது. இயக்குநர்கள்,



நிர்வாகிகள், நிர்வாக உறுப்பினர்கள், இளையோர், பாடசாலைகள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், பாடசாலை நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், தமிழ் ஆர்வலர்கள், சான்றோர்கள், புரவலர்கள், ஊடகவியலாளர்கள், தன்னார்வலர்கள் எனப் பெரும் அணி ஒன்று இணைந்து இக்கட்டமைப்பின் கீழ் பணியாற்றுகின்றார்கள் என்று அறியும் போது கட்டமைப்பின் தாற்பரியமானது அதிக ஆழமும் ஆழந்த நம்பிக்கையும் தளராத உறுதியும் கொண்டது என்பதனை அறிய முடிகின்றது.

• • •

# பங்களாதேச தேர்தல்

## - BNP ஒரு தேசத்தை புரிந்துகொண்டதால் வென்றது




மொழியாக்கம்: ஆர்த்திகன்

பங்களாதேஷில் 13வது நாடாளுமன்றத் தேர்தல் ஒரு புரட்சி அல்ல. அது ஒரு கணக்கீடு. வாக்குகள் எண்ணப்பட்டபோது, ஷேக் ஹசீனாவின் 15 ஆண்டுகால அரசியல் வனாந்தரத்தில் பல ஆண்டுகளுக்குப் பிறகு பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி (BNP) ஒரு தீர்க்கமான வெற்றியைப் பெற்றுள்ளது.

பெரும்பாலான தலைப்புச் செய்திகள் இதை ஒரு வியத்தகு மீள் வருகையாக பார்த்தன, ஆனால் இது கவனமாக வழிநடத்தப்பட்ட நடவடிக்கையே தவிர வாக்காளர் தேர்வின் அலை அல்ல. இது விரக்தி மற்றும் முதல்-பாஸ்ட்-தி-போஸ்ட் (FPTP) எண்கணிதத்தால் உருவாக் கப்பட்ட ஒரு போட்டி.

BNP ஏன் வெற்றி பெற்றது என்பதைப் புரிந்து கொள்ள, இது ஒரு ஜமாத் தருணம் வீணடிக்கப்பட்டது என்ற சோம்பேறித்தனமான கதையை முதலில் கைவிட வேண்டும். முடிவுகள் தெளிவாகத் தெரிந்ததும், பங்களாதேஷ் ஜமாத்-இ-இஸ்லாமி (JI) 68 இடங்களைப் பெற்றுள்ளது, அதே நேரத்தில் ஜமாத் தலைமையிலான கூட்டணி நாடாளுமன்றத்தில் 77 இடங்களைப் பெற்றது. 1991 ஆம் ஆண்டு வெறும் 18 இடங்களை மட்டுமே நாடாளுமன்றத்தில் பெற்ற ஒரு கட்சிக்கு இது ஒரு சிறிய சாதனை அல்ல.

ஆகஸ்ட் 2024 இல் ஹசீனாவின் சர்வாதிகாரத்தை வீழ்த்திய ஒரு வெகுஜன எழுச்சியின் பின்னணியில் இந்தத் தேர்தல் வந்தாலும், எந்தவொரு குறிப்பிடத்தக்க புரட்சியாலும் அது இயக்கப்படவில்லை. ஆனால் ஆழமான சித்தாந்த முறிவு இல்லை, வாக்காளர் விசுவாசங்களில் நிரந்தர மறுசீரமைப்பு இல்லை, குறைந்தபட்சம் நாட்டின் தேர்தல் மனநிலையின் கட்டமைப்பையே சிதைக்கும் அளவில் இல்லை.




நிச்சயமாக, இது ஒரு தேசிய அலைத் தேர்தல் அல்ல, அதில் வர்க்கம், பாலினம் மற்றும் பிராந்தியம் முழுவதும் ஒரு குறிப்பிட்ட கட்சியை நோக்கி ஒரு மனநிலை பரவுகிறது. என்ன நடந்தது என்பது ஒரு கலப்பினமாகும்: பெரும்பாலும் குறிப்பிடத்தக்க விலகல்களுடன் கூடிய ஒரு சாதாரண தேர்தல், ஆனால் ஒரு கணிக்கக்கூடிய விளைவு.

கட்சி விசுவாசிகள் பெரும்பாலும் வீட்டிலேயே இருந்தனர். ஊசலாடும் வாக்காளர்கள் முக்கியம். நாட்டின் சில பகுதிகளில், BNP-யின் உள்ளூர் தலைமையின் மீதான விரக்தி தற்காலிக கட்சித் தாவல்களைத் தூண்டியது - அவர்களில் பலர் ஜமாத் அல்லது NCP-க்கு தாவினர்.

கோபம் உண்மையானது. ஆகஸ்ட் 5-க்குப் பிறகு, BNP-யின் அடிமட்ட இயந்திரம் மோசமாக செயல்பட்டது. மாவட்டங்கள் முழுவதும் உள்ள தலைவர்கள் ஊழல் மற்றும் மிரட்டி பணம் பறித்ததாக குற்றம் சாட்டப்பட்டனர். வாக்காளர்கள் வெறுமனே ஏமாற்றமடையவில்லை; தேநீர் கடைகளிலும் தொழிற்சங்க பரிஷத் முற்றங்களிலும் கேட்கப்பட்ட மொழியைப் பயன்படுத்தினால், அவர்கள் "உண்மையில், மிகவும் கோபமடைந்தனர்". அந்தக் கோபம் ஜமாத்தின் எழுச்சியை விளக்குகிறது. BNP விசுவாசிகளில் ஒரு பகுதியினரும், ஸ்விங் வாக்காளர்களில் கணிசமான பகுதியினரும் "நேர்மையான மாற்றீடு" என்ற வாக்குறுதியை நோக்கிச் சென்றனர்.

ஜமாத்தை விட வரலாற்று ரீதியாக பரந்த மற்றும் நிறுவன ரீதியாக ஆழமான BNP-யின் அடித்தளம் சரியவில்லை. கட்சித் தாவல்களுக்குப் பிறகும், அது எண்ணிக்கையில் பெரியதாகவே இருந்தது. BNP-யின் வேட்புமனு உத்தி எதிர்பாராத விதமாக புத்திசாலித்தனமாக நிரூபிக்கப்பட்டது.




ஜமாத் ஒப்பீட்டளவில் அறியப்படாத ஆனால் சித்தாந்த ரீதியாக நம்பகமான நபர்களை நிறுத்திய இடத்தில், BNP அதன் பழைய வேட்பாளர்களை - நன்கு அறியப்பட்ட பெயர் அங்கீகாரம் மற்றும் முறைசாரா வலைப் பின்னல்களைக் கொண்டவர்களை சார்ந்திருந்தது.

குறிப்பாக கிராமப்புற வங்களாதேசத்தில் அது முக்கியமானது. நகர்ப்புற, படித்த வாக்காளர்கள் நெறிமுறை நிர்வாகத்தின் சொல்லாட்சியால் சிலிர்த்துப் போகலாம். அவர்களுக்கு, ஒரு அழியாத, சித்தாந்த ரீதியாக ஒழுக்கமான வேட்பாளரின் யோசனை ஒரு தார்மீக மறுசீரமைப்பாக எதிரொலிக்கிறது.

ஆனால் கிராமப்புற வாக்காளர்கள் சிக்கலான ஆதரவு வலைகளுக்குள் செயல்படுகிறார்கள். ஒரு எம்.பி. ஒரு சுருக்கமானவர் அல்ல; அவர்தான் பாதுகாப்பு வலைகள், வேலைகள், ஸ்திரத்தன்மை மற்றும் தகராறு தீர்வு ஆகியவற்றின் தரகர். நேர்மை, தனிமையில், அணுகலை உறுதி செய்யாது. பரிச்சயம் உறுதி செய்கிறது.

பி.என்.பி.யின் அத்துமீறல்களால் வெறுப்படைந்த பலர், ஒரு மாற்றமாக கருதினர். ஜமாத் ஒரு பிரபலமான தலைவரை நிறுத்திய தொகுதிகளில், சிலர் அதைச் செய்தனர். ஆனால் மற்ற இடங்களில், வாக்காளர்கள் தங்களுக்குத் தெரியாத வேட்பாளர்களை சந்தித்தனர், அவர்களின் "நேர்மையை" அவர்களால் சரிபார்க்க முடியவில்லை, மேலும் அவர்களின் கட்சி தார்மீக முத்திரைக்கு அப்பால் எதுவும் வழங்கவில்லை.

ஜமாத் அதன் கட்டமைப்பு வரம்புகளை மூலோபாய தவறுகளுடன் இணைத்தது. பெண்கள் பிரச்சினைகளில் அதன் மோசமான நிலைப்பாடு பெண் வாக்காளர்களின் பெரிய பிரிவுகளை நம்ப வைக்கத் தவறிவிட்டது.

வங்களாதேசத்தின் சமூக மாற்றம் என்பது வெறும் அலங்காரம் அல்ல, மேலும் அதன் தொழிலாளர் சக்தி, கல்வி முறை மற்றும் நுண்கடன் பொருளாதாரத்தில் பெண்கள் மையமாக உள்ளனர். பாலின சமத்துவத்திற்கான நம்பகமான பார்வையை வெளிப்படுத்த முடியாத ஒரு கட்சி தேசிய அலையை வெல்ல முடியாது.



1971 ஆம் ஆண்டு நினைவுகளுடன் ஜமாத்தின் திருத்தல்வாத அரட்டை மிகவும் சேதத்தை ஏற்படுத்தியது. விடுதலைப் போர் என்பது நாட்டின் தார்மீக ஸ்தாபக ஆவணமாகும். ஜமாத்தின் வரலாற்றுப் பங்கை மென்மையாக்க அல்லது மறுபரிசீலனை செய்ய முயற்சிப்பது, மதச்சார்பற்ற-தாராளவாத உயரடுக்கிற்கு அப்பால் வாக்காளர்களை அந்நியப்படுத்தியது.

1971 ஆம் ஆண்டு வாக்கில் பழமைவாத குடும்பங்கள் கூட சிவப்பு கோடுகளை வரைந்தன. பொது உணர்வின் நடைமுறையில் இருந்த முறை அப்பட்டமாக இருக்கலாம்: ஒருவர் மன்னிக்கலாம்; ஒருவர் மறக்க முடியாது.

ஆனாலும் ஜமாத்தின் செயல்திறன் இன்னும் வரலாற்று சிறப்புமிக்கது. ஜமாத்-இ-இஸ்லாமி மற்றும் அதன் கூட்டணி கூட்டணி 77 இடங்களைப் பெற்றன, இது அதன் ஒழுக்கமான கேடருக்கு மட்டுமல்ல, பிஎன்பியின் சொந்த தவறான செயல்களுக்கும் சான்றாகும். மிரட்டி பணம் பறித்தல் ஊழல்கள் மற்றும் உள்ளூர் ஆணவம் வாக்காளர்களை ஜமாத்தின் கைகளில் தள்ளியது.

இறுக்கமாக போட்டியிடும் FPTP நிலப்பரப்பில், சில சதவீத புள்ளிகள் கூட டஜன் கணக்கான இடங்களை புரட்டக்கூடும். ஜமாத் அந்த கோபத்தை துல்லியமாகப் பயன்படுத்திக் கொண்டது, அங்கு அதன் நிறுவன வலிமை வலுவாக உள்ளது.

ஆனால் துல்லியம் என்பது அகலம் போன்றது அல்ல. ஜமாத்தின் எழுச்சி பிராந்திய ரீதியாக குவிந்திருந்தது. அதன் ஆதரவு வர்க்கம், பாலினம், கல்வி மற்றும் வயது ஆகியவற்றால் கூர்மையாக மாறுபடுகிறது. அது ஒரு அலைத் தேர்தலுக்கு எதிரானது. சீரான தேசிய உந்துதல் இல்லாமல், FPTP இல் வெற்றி பெறுவது எளிதான காரியமல்ல.

BNP-யின் பழைய காவலர் Awami League (AL) ஆதரவாளர்களைத் துன்புறுத்திய பகுதிகளில், சிலர் வாக்களிப்பதைத் தவிர்த்தனர் அல்லது ஜமாத்துக்கு ஆதரவளித்தனர். ஆனால் தேசிய அளவில், ஈர்ப்பு விசை BNP-க்கு சாதகமாக இருந்தது. வாக்காளர்கள் வெற்றியாளரின் பக்கம் இருக்க விரும்பினர்.

தேர்தல் நாளுக்கு முந்தைய நான்கு நம்பத்தகுந்த சூழ்நிலைகள் பங்குகளை தெளிவுபடுத்தின. குறிப்பிடத்தக்க AL வாக்குப்பதிவு இல்லாமல், BNP ஒரு இறுக்கமான போட்டியில் பன்முகத்தன்மையைப் பெறும். மிதமான AL ஆதரவுடன், அது ஒரு வசதியான பெரும்பான்மையை வெல்லும். அமோக AL ஆதரவுடன், மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கூட சாத்தியமாகும். முழு அளவிலான


தொடர்ச்சி: பக்கம் 18

# இனப்படுகொலை கடந்த காலத்தில் மட்டுமல்ல – இப்போதும் தொடர்கிறது

## செனட்டர் டேவிட்



அவுஸ்திரேலியாவின் கிரீன்ஸ் கட்சியின் செனட்டர் டேவிட் ஷூபிரிட்ஜ், தமிழ் உயிர் பிழைத்தவர்களுடன் இணைந்து, தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் இனப்படுகொலை மற்றும் ஒடுக்குமுறைக்கு எதிராக அழைப்பு விடுத்துள்ளார்.



இன்று, நமது சமூகத்தின் வலிமையையும், தமிழ் இனப்படுகொலையை வரலாற்றிலிருந்து அழிக்கவோ அல்லது உலகத்தால் புறக்கணிக்கப்படுவதை மறுப்பவர்களின் தைரியத்தையும் நாங்கள் மதிக்கிறோம். நீதி, பொறுப்புக்கூறல், அகதிகளுக்கான பாதுகாப்பு மற்றும் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை கடந்த காலத்தில் மட்டுமல்ல - இப்போதும் தொடர்கிறது என்பதை ஏற்றுக்கொள்வதற்கான எங்கள் அழைப்பில் செனட்டர் ஷூபிரிட்ஜ் இணைகிறார். இலங்கையில் நடந்து வரும் இனப்படுகொலையை எதிர்த்து ஆஸ்திரேலியா நடவடிக்கை எடுக்க தமிழர்கள் அழைப்பு விடுக்த்துள்ளனர்.

இது தொடர்பில் அவுஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்ட தமிழர் ஏதிலிகள் சபை பிப்ரவரி 4 ஆம் நாள் இலங்கையின் சுதந்திர தினம் என்று அழைக்கப்படும் நாளை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கின் பூர்வீக மக்களான தமிழ் மக்களுக்கு எதிராக நடந்து வரும் இனப்படுகொலைக்கு உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது. இந்த இனப்படுகொலை 2009 இல் முடிவடையவில்லை. இது இன்று இராணுவமயமாக்கல், நில அபகரிப்பு, அரசியல் சிறைவாசம், சித்திரவதை, பாலியல் வன்முறை மற்றும் நீதியை முறையாக மறுப்பது மூலம் தொடர்கிறது.



ஆஸ்திரேலிய அரசியல்வாதிகளுக்காக தமிழ் ஏதிலிகள் கவுன்சிலால் தயாரிக்கப்பட்ட புதிதாக வெளியிடப்பட்ட நாடாளுமன்ற விளக்கங்கள், 2025 முழுவதும், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழர்கள் எவ்வாறு இனப்படுகொலை சகாப்த அடக்குமுறை கட்டமைப்புகளின் கீழ் தொடர்ந்து வாழ்கிறார்கள் என்பதை ஆவணப்படுத்துகின்றன. பொதுமக்கள் நிலங்களை இராணுவம் ஆக்கிரமித்தல், அரசால் இயக்கப்படும் மக்கள் தொகை மாற்றம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களின் கீழ் தமிழ் அரசியல் கைதிகளை தன்னிச்சையாகக் காவலில் வைத்தல், பத்திரிகையாளர்கள் மற்றும் சிவில் சமூகத்தை அடக்குதல், மனிதப் புதைகுழி விசாரணைகளைத் தடுப்பது மற்றும் காணாமல் போனவர்களின் குடும்பங்கள் தொடர்ந்து துன்புறுத்தப்படுவது ஆகியவை இதில் அடங்கும்.



சமீபத்திய நாட்களில், வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழர்கள் பெரிய அளவிலான போராட்டங்களில் அணிதிரண்டுள்ளனர், இதில் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க தலைமையிலான தற்போதைய நிர்வாகத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் முன்மொழியப்பட்ட கிவில் ஓயா நீர்ப்பாசனத் திட்டத்தை எதிர்க்கும் பேரணிகள் அடங்கும். இந்தத் திட்டம் மேலும் நில அபகரிப்பு, மக்கள் தொகை மாற்றம் மற்றும் தமிழ்ப் பகுதிகளில் தீவிர இராணுவமயமாக்கலுக்கு வழிவகுக்கும் என்று தமிழர்கள் எச்சரித்துள்ளனர். கண்காணிப்பு மற்றும் அச்சுறுத்தல் இருந்தபோதிலும் நடத்தப்பட்ட இந்த போராட்டங்கள், அபகரிப்பு மற்றும் அடக்குமுறை கொள்கைகள் தீவிரமாகவும் தீர்க்கப்படாமலும் உள்ளன என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.




கடலோர நீர்நிலைகளில் கடற்படை கட்டுப்பாடு, தன்னிச்சையான கட்டுப்பாடுகள் மற்றும் துன்புறுத்தல் மூலம் தமிழ் மீன்பிடி வாழ்வாதாரங்கள் தொடர்ந்து வேண்டுமென்றே குறைமதிப்பிற்கு உட்படுத்தப்படுகின்றன, மேலும் அவர்களின் உயிர்வாழ்வு நிலம் மற்றும் கடலுடன் பிணைக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு பொருளாதார ஓரங்கட்டல் மற்றும் பாதுகாப்பின்மையை மேலும் வலுப்படுத்துகிறது.

“பிப்ரவரி 4 சுதந்திரத்தின் கொண்டாட்டமாக கூறப்படுகின்றது, ஆனால் ஈழத் தமிழர்களுக்கு இது பல தசாப்தங்களாக தொடரும் ஒடுக்குமுறையைக் குறிக்கிறது” என்று தமிழ் அகதிகள் கவுன்சிலின் செய்தித் தொடர்பாளர் ரேணுகா இன்பகுமார் கூறினார். “இந்த தேதி சுதந்திரத்தை குறிப்பதல்லஇ இனப்படுகொலையின் தொடர்ச்சியைக் குறிக்கிறது. தமிழர்கள் தொடர்ந்து இராணுவக் கட்டுப்பாடுஇ கண்காணிப்பு மற்றும் அச்சத்தின் கீழ் வாழ்கின்றனர்.”

தமிழ் மக்களுக்கு எதிராக நடந்து வரும் இனப்படுகொலையை ஆஸ்திரேலிய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும், இலங்கையுடனான இராணுவ மற்றும் பாது

தொடர்ச்சி: பக்கம் 18

# நீண்ட பிராந்திய போருக்குள் செல்ல அமெரிக்கா அஞ்சுகின்றதா?



ஈரான் குறித்து அடுத்த பத்து நாட்களுக்குள் ஒரு முடிவு எடுக்கப்படலாம், ஒருவேளை நாம் இன்னும் முன்னேற வேண்டியிருக்கலாம், ஒருவேளை இல்லாமலும் இருக்கலாம். ஒருவேளை நாம் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்" என்று டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.



இந்த வார இறுதியில் அமெரிக்க இராணுவம் ஈரானை தாக்க தயாராக உள்ளது, ஆனால் ட்ரம்ப் இன்னும் இறுதி முடிவை எடுக்கவில்லை என்று சிஎன்என் செய்தி வெளியிட்டுள்ளது. அதாவது ஈரானில் நிலைமை மிகவும் சிக்கலானதாகி வருகிறது, அமெரிக்கா அதிக படைக் கலங்களை அனுப்பி வருகின்றது.

கடந்த மோதலில், இஸ்ரேல் தனது முழு தாக்குதலையும் வான்வழி ஏவுகணைகளைப் பயன்படுத்தி நடத்தியது, ஆனால் அந்நாட்டிடம் இஸ்ரேலிய பிரதேசத்திலிருந்து ஈரானை தாக்கும் திறன் கொண்ட ஜெரிகோ ஏவுகணைகளும் உள்ளன. கடந்த மோதலுக்குப் பிறகு, ஆயுத உற்பத்தியை அதிகரிப்பதில், குறிப்பாக இடைமறிப்பான்கள் உட்பட, இஸ்ரேல் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்துள்ளது.

இஸ்ரேல் இந்த முறை பெரிய தாக்குதலை நடத்த முடியும், ஒருவேளை தரையிலிருந்து தரைக்கு ஏவப்படும் ஏவுகணைகள் உட்பட, அது பயன்படுத்தும் 170-200 விமானங்களுக்கு கூடுதலாக பயன்படுத்தப்படலாம். இந்த ஆண்டு ஜனவரி முதல் அமெரிக்கா போருக்குத் தயாராக சுமார் 250 சரக்கு விமானங்களை இஸ்ரேலுக்கு ஆயுதங்களுடன் அனுப்பியுள்ளது.





தற்போதைக்கு கடற்படை கப்பல்களில் உள்ள விமானங்களை தவிர்த்து, இந்தப் பகுதியில் உள்ள அதன் நிலத் தளங்களில் சுமார் 150 போர் விமானங்களைக் அமெரிக்கா, கொண்டுள்ளது, எனவே கடற்படை போர் விமானங்களையும் சேர்த்தால், மொத்த எண்ணிக்கை 500 ஐ நெருங்கக்கூடும்.

வான்வழித் தாக்குதல் சந்தேகத்திற்கு இடமின்றி பேரழிவை ஏற்படுத்தும் என்றாலும், உண்மையான மோதல் கடலில் தான் நிகழும், எனவே தான் இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் வடக்கு கடலில் ரஸ்ய, சீன மற்றும் ஈரான் கடற்படையினர் போர் ஒத்திகை பயிற்சிகளை இந்த வாரம் ஆரம்பித்துள்ளனர். அந்த பயிற்சிகள் தம்மை சின மூட்டுவதாக அமெரிக்கா தெரிவித்தாலும், ஈரான் தனது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்குவதாக இல்லை.

அங்கு ஈரானின் கடற்படை பெரிய போர்க்கப்பல்களின் பலத்திற்கு சவாலாக உள்ளன. சமச்சீரற்ற போர்களுக்கான பரந்த ஆயுதக் களஞ்சியத்துடன் ஈரான் தன்னை நிலைநிறுத்தியுள்ள ஒரு பகுதி அது. 12 நாட்கள் போரின் போது நடந்த தாக்குதல்களைப் போன்ற தாக்குதல்கள் அல்ல அவை. ஏனெனில் அன்று ஈரான் கடற்படையினர் தாக்குதல்கள் எதிலும் ஈடுபடவில்லை.



அதேசமயம், கட்டாரில் உள்ள அல் உதெய்த் போன்ற முக்கிய தளங்களில் சுமார் 85 டேங்கர்கள் எனப்படும் போர் விமானங்களுக்கு வானில் இருந்து எரிபொருள் நிரப்பும் விமானங்கள் உள்ளன. செயற்கைக்கோள் படங்கள் மற்றும் விமான கண்காணிப்பு மூலம் குறைந்தது 16–20 விமானங்களின் இருப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. 12 நாட்கள் போரில் இஸ்ரேல் செய்ததைப் போலவே அமெரிக்கர்களும் செயல்படுவார்கள் என நம்பப்படுகின்றது. தாக்குதல்களின் ஆரம்ப அலைகளுக்கு எரிபொருள் நிரப்புதல் மற்றும் கூடுதல் டாங்கர்களைப் பயன்படுத்துவார்கள். ஏனெனில்; தாக்குதல் விமானங்கள் மிகவும் தொலைதூர தளங்களிலிருந்து வர வேண்டும்.




## வேல்ஸில் இருந்து **அருஸ்**

ஆரம்ப தாக்குதலில் டோமாஹாக்ஸ் ஏவுகணைகள் அதிக எண்ணிக்கையில், ஒருவேளை நூற்றுக்கணக்கானவை ஏவப்படலாம். ஈரானின் பதில் தாக்குதல் திறனை சில நாட்களுக்குள் நடுநிலையாக்குவதே அதன் நோக்கமாக இருக்கும். அது ஒரு பெரிய சவாலாக இருக்கும், ஏனெனில் அது ஈராக் மற்றும் ஏமனுக்கு எதிராக நடவடிக்கைகளில் வெற்றி பெறவில்லை. ஈராக்கில் மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கையில் 6 விமானம் தாங்கிக் கப்பல்கள் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஏமனில் அது சுமார் 20 கப்பல்களைக் கொண்ட ஒரு தாக்குதல் குழுவாக இருந்தது, ஆனாலும் ஹவுத்திகள் தங்கள் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை ஏவுவதைத் தடுக்க முடியவில்லை. எனவே மோதலின் தொடக்கத்திலேயே ஈரானிய ரேடார்கள், ஏவுகணைகள் மற்றும் கட்டளை மையங்கள் என்பன ஒருங்கிணைந்த உள் நடவடிக்கைகளால் பெருமளவில் குறிவைக்கப்படும்.

ஈரானின் கண்காணிப்பு திறன்கள் சீன அமைப்புகள் மற்றும் அவற்றின் ட்ரோன்கள் சார்ந்தவை. அவற்றில் நூற்றுக்கணக்கானவற்றை ISR நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும். எனவே நாசவேலை மூலம் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களினால் ஈரானில் உள்ள ஆயுதங்கள் மற்றும் கட்டளை மையங்களுக்கு குறிப்பிடத்தக்க சேதம் ஏற்படும் என்று எதிர்பார்க்கலாம்.



சமீபத்தில், சீனா ஈரானுக்கு எதிர் உளவுத்துறையில் உதவுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது, ஆனால் அது சில உடனடி விளைவுகளைக் கொண்ட நீண்ட கால திட்டம். அது சில நாட்கள் மோதல் அல்ல. இது ஒரு நீண்ட போர், ஏனெனில் அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கும் அணுசக்தி நிலையங்களை அழிப்பதற்கும் ஒரு தரைப்படை நடவடிக்கை தேவைப்படும், அது அதிகளவில் சாத்தியமில்லை. அமெரிக்கர்கள் வாரங்கள் நீடிக்கும் போருக்கான தயாரிப்புகளைப் பற்றிப் பேசுகிறார்கள், ஆனால் ஈரானிடமிருந்து பாரிய பதிலடிகள் மற்றும் அதிக தாக்குதல்களுடன், இது மாதங்களுக்கு நீட்டிக்கப்படலாம், சில வாரங்களில் வான் மேன்மை எட்டப்பட்டாலும், ஒரு நாளைக்கு பில்லியன் கணக்கான டொலர்கள் செலவு ஆகும்.

ஈரானுக்கு எதிரான ட்ரம்பின் போர் கடனில் அதிக அதிகரிப்புக்கும் மற்றும் டாலரின் முடிவுக்கும் வழிவகுக்கும். இந்தப் போர் அமெரிக்காவை பெரும் மந்தநிலைக்கு தள்ளி பின்னர் வறுமையில் தள்ளும் என அமெரிக்க சிந்தனைக் குழுவான "ரான் பால்" இன் நிர்வாக இயக்குனர் டேனியல் மெக் ஆடம்ஸ் தெரிவித்துள்ளார்.

எனவே, அமெரிக்கா-இஸ்ரேல் விரைவான நடவடிக்கையை எதிர்பார்க்கின்றன, ஆனால் ஈரான் அதன் சமச்சீரற்ற கடற்படைப் போரை நடைமுறைக்குக் கொண்டுவருவதை அது தடுக்காது, அதற்காக அதன்

தொடர்ச்சி: பக்கம் 18

## இனப்படுகொலை ... தொடர்ச்சி...

காப்பு ஒத்துழைப்பை நிறுத்த வேண்டும், சர்வதேச பொறுப்புக்கூறல் வழிமுறைகளை ஆதரிக்க வேண்டும், தமிழ் புகலிடம் கோருபவர்களை கட்டாயமாக திருப்பி அனுப்புவதை நிறுத்த வேண்டும் என்று தமிழ் ஏதிலிகள் கவுன்சில் கேட்டுக்கொள்கிறது.

தமிழர்களைப் பொறுத்தவரை, பிப்ரவரி 4 கொண்டாட்டத்திற்கான நாள் அல்ல" என்று திருமதி இன்பகுமார் கூறினார். "இது ஒடுக்குமுறை நாள் - இனப்படுகொலை தொடர்கிறது என்பதற்கான நினைவூட்டல், மேலும் ஆஸ்திரேலியா மறுப்பை மட்டும் தெரிவிக்காது, நீதியின் பக்கம் நிற்க வேண்டும் என்ற அழைப்பு."

"இனப்படுகொலை மாநாடு மற்றும் அகதிகள் மாநாட்டில் கையொப்பமிட்ட நாடாக, ஆஸ்திரேலியா செயல்பட சட்டப்பூர்வ மற்றும் தார்மீகக் கடமையைக் கொண்டுள்ளது" "தொடர்ந்து நடைபெறும் இனப்படுகொலையை எதிர்கொள்வதில் மௌனம் காப்பது அல்லது செயலற்ற தன்மை நடுநிலைமை அல்ல - அது உடந்தை." என திருமதி இன்பகுமார் கூறினார்.

அன்று, தமிழ் ஏதிலிகள் கவுன்சில் ஆஸ்திரேலிய அரசாங்கத்திடம் பின்வருமாறு அழைப்பு விடுக்கிறது:

- தமிழ் மக்களுக்கு எதிராக நடந்து வரும் இனப்படுகொலையை ஏற்றுக்கொள்ள வேண்டும்
- பொறுப்புக்கூறல் மற்றும் இராணுவமயமாக்கல் நிறுத்தப்படுவது நிகழும் வரை இலங்கையுடனான இராணுவம், காவல்துறை மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை நிறுத்தி வைக்க வேண்டும்
- ஐ.நா தலைமையிலான சான்றுகள் பாதுகாப்பு உட்பட சர்வதேச பொறுப்புக்கூறல் வழிமுறைகளை ஆதரிக்க வேண்டும்
- தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களை கட்டாயமாக திருப்பி அனுப்புவதை நிறுத்த வேண்டும்
- தமிழ் சிவில் சமூகம், உயிர் பிழைத்தவர்கள் மற்றும் காணாமல் போனவர்களின் குடும்பங்களுடன் நேரடியாக ஈடுபட வேண்டும்
- சர்வதேச சட்டத்தின்படி தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்

• • •

## பங்களாதேச தேர்தல் ... தொடர்ச்சி...

ஜமாத் அலை மட்டுமே - ஒரு குறுக்கு வர்க்க, குறுக்கு பாலின தேசிய தழுவல் - சமன்பாட்டை மாற்றியிருக்க முடியும்.

அப்படியானால், BNP-யின் வெற்றி கட்டமைப்பு நன்மை, மூலோபாய வேட்பாளர் தேர்வு மற்றும் நாட்டின் பாரம்பரிய வாக்காளர்களின் பகுத்தறிவு கணக்கீடுகளின் விளைவாகும். இது பெண்களின் உரிமைகள் மற்றும் வரலாற்று நினைவகத்தில் ஜமாத்தின் சுயமாக ஏற்படுத்திய காயங்களால் உதவியது. முரண்பாடாக, BNP-யின் சொந்த உள்ளூர் தவறான நடத்தையால் இது சாத்தியமாக்கப்பட்டது, இது ஜமாத்தின் வாக்குப் பங்கை அதிகரித்தது, ஆனால் FPTP கணிதத்தை வெல்ல போதுமானதாக இல்லை.

இந்தத் தேர்தலின் மற்றொரு அடிக்குறிப்பு கவனத்திற்குரியது: ஐந்து இடங்களைக் கைப்பற்றிய தேசிய குடிமக்கள் கட்சியின் (NCP) தோற்றம். தெற்காசிய நாட்டின் மிகவும் துருவப்படுத்தப்பட்ட அரசியல் சூழலில், ஒரு எழுச்சியிலிருந்து பிறந்த ஒரு புதிய கட்சிக்கு, இது ஒரு சிறிய சாதனை அல்ல.

BNP மற்றும் ஜமாத்தின் புதிய இருமைக்கு வெளியே மாற்றுகளுக்கான ஒரு பசியை, எவ்வளவு மிதமானதாக இருந்தாலும், இது குறிக்கிறது. விகிதாசார பிரதிநிதித்துவத்தின் கீழ், அத்தகைய கட்சி செழிக்கக்கூடும். FPTP-யின் கீழ், ஐந்து இடங்கள் ஒரு திருப்புமுனை மற்றும் உச்சவரம்பு ஆகும்.

வங்காளதேசத்தின் 13வது நாடாளுமன்றத் தேர்தல், இறுதியில், எல்லைகளின் கதையாக இருந்தது: கோபத் தின் எல்லைகள், தார்மீக முத்திரையின் எல்லைகள், திருத்தல் வாதத்தின் எல்லைகள் மற்றும் வெற்றியாளர்-எடுக்கும் அமைப்பில் நிறுவன ஆழத்தின் நீடித்த சக்தி.

BNP ஒரு தேசத்தை ஊக்கப்படுத்தியதால் அல்ல, மாறாக அதைப் புரிந்துகொண்டதால் வென்றது.

**நன்றி: அல்ஜசீரா**

• • •

## எப்ஸ்டீன் விவகாரம்... தொடர்ச்சி...

மேலும் கோப்புகளில் அவரது பெயர் தோன்றுவது எந்த வகையான குற்றச் செயலையும் குறிக்கவில்லை. கேட்ஸ் அறக்கட்டளை அதன் ஆப் பிரிக்கா மற்றும் இந்திய அலுவலகங்களின் தலைவர் அங்கூர் வோரா உச்சிமாநாட்டில் கேட்ஸுக்குப் பதிலாக பேசுவார் என்று கூறியுள்ளது.

"சுகாதாரம் மற்றும் மேம்பாட்டு இலக்குகளை" முன்னேற்றுவதற்கான இந்தியாவில் அதன் பணிகளுக்கு "முழுமையாக" உறுதிபூண்டுள்ளதாக அந்த அமைப்பு மேலும் கூறியது. கேட்ஸ் உச்சிமாநாட்டில் கலந்து கொள்வாரா என்பது குறித்து பல நாட்கள் நிச்சயமற்ற தன்மைக்குப் பிறகு உச்சிமாநாட்டில் பேசுவதில்லை என்ற முடிவு வந்தது.

அவர் தற்போது இந்தியாவில் இருக்கிறார், திங்களன்று தெற்கு மாநிலமான ஆந்திராவிற்கு விஜயம் செய்தார், அங்கு அவர் சுகாதாரம், விவசாயம், கல்வி மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான முன்முயற்சிகள் குறித்து விவாதித்ததாகக் கூறப்படுகிறது. ஊடக அறிக்கைகள் அவர் உச்சிமாநாட்டிலிருந்து விலகுவார் என்று ஊகிக்கப்பட்ட பின்னர், செவ்வாயன்று அவர் திட்டமிட்டபடி உரை நிகழ்த்துவார் என்று அவரது அறக்கட்டளை கூறியது. கேட்ஸ் விலகுவது உச்சி மாநாட்டிற்கு ஒரு அடியாகும், இது நாட்டை உலகளாவிய AI மையமாக நிலைநிறுத்துவதற்கான ஒரு முதன்மைக் கூட்டமாக இந்தியா முன்வைத்துள்ளது.

## நீண்ட பிராந்திய போருக்கு... தொடர்ச்சி...

கடற்படை ,வடிவமைக்கப்பட்டு கட்டமைக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும், கிட்டத்தட்ட 25% எரிவாயு போக்குவரத்தும் 30% எண்ணெய் போக்குவரத்தும் கடந்து செல்லும் ஹார்முஸ் ஜலசந்தியை மூடும். இந்தப் போர் நீண்ட காலமாக கண்டிராத வகையில் உலகப் பொருளாதாரத்தை சீர்குலைக்கும். எண்ணெய் விலை ஒரு பரல் 130 டொலர்களாக உயரலாம்.

அதேசமயம், ஈரானுடனான போர் தொடர்பாக பிரிட்டனுக்கும் அமெரிக்காவிற்கும் இடையே முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளதாக "தி டைம்ஸ்" செய்தித்தாள் தெரிவித்துள்ளது. பிரிட்டிஷ் பிரதம மந்திரி கெய்ர் ஸ்டார்மர், ஈரானை தாக்க பிரிட்டிஷ் தளங்களைப் பயன்படுத்த வேண்டும் என்ற டொனால்ட் ட்ரம்பின் கோரிக்கையை நிராகரித்ததுடன், அத்தகைய நடவடிக்கை "சர்வதேச சட்டத்தை மீறுவதாக" இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் தளங்களைப் பயன்படுத்துவது குறித்த கருத்து வேறுபாடுகள்தான் "சாகோஸ் தீவுக்கூட்டம்" ஒப்பந்தத்திற்கான தனது ஆதரவை டிரம்ப் திரும்பப் பெற முடிவு செய்ததற்கு முக்கிய காரணம். "டியாகோ கார்சியா" தீவு மற்றும் க்ளூசெஸ்டர்ஷையரில் உள்ள விமானப்படை தளமான "RAF ஃபேர்ஃபோர்டை"யும் ஈரானை தாக்க லண்டன் அனுமதிக்காது என்று ஸ்டார்மர் டிரம்பிடம் கூறியுள்ளார். அதாவது ஆப்கான், ஈராக், லிபியா மற்றும் சிரியா மீதான தாக்குதல்களின் போது இருந்த நேட்டோ கூட்டணி தற்போது வலுவிழந்து வருவதையே இது காட்டுகின்றது.

ரஸ்ய - உக்ரைன் போரில் ஏற்பட்ட நேட்டோவின் தோல்வியை ஈரான் போர் மேலும் உறுதி செய்யும் நிலையையே ஏற்படுத்தும். அதாவது ஈரான் போர் ஒரு நீண்டநாள் பிராந்திய போராக மாற்றம் பெற்றால் அது அமெரிக்காவின் பிடியை அந்த பிராந்தியத்தில் இருந்து முற்றாக அகற்றும் ஒரு நிலையை ஏற்படுத்தும், இது அமெரிக்காவுக்கும் தெரியும் எனவே தான் அது தனது படையினரை அதிகளவில் குவித்து வந்தாலும் ஈரானை வீழ்த்த பல மறைமுகமான திட்டங்களை வகுத்து வருகின்றது. அதனை தான் இந்த போரின் தாமதம் எடுத்துக் காட்டுகின்றது.

• • •

## நெருக்கடிகளை எதிர் ... தொடர்ச்சி...

அவர்கள் நஷ்ட மடையும்போது அவர்கள் விவசாயத்தினை விட்டுச்செல்வதன் மூலம் தமிழர்களின் பொருளாதார பலத்தினை சிதைக்கலாம் என்ற நோக்குடன் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளை முறியடிப்பதற்கான நடவடிக்கைகளை அரசியல்வாதிகளும் புலம்பெயர் தேச உறவுகளும் முன்னெடுக்கவேண்டும்.

கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் நெல்லை கொள்வனவு செய்து அவற்றினை உலர்த்தி அரிசியாக மாற்றி அவற்றினை ஏற்றுமதிசெய்வதற்கான பொறிமுறைகள் உருவாக்கப்படும்போது கிழக்கு மாகாணம் மட்டுமன்றி வடகிழக்கு மாகாணம் முழுவதும் பொருளாதார ரீதியான மாற்றங்கள் உருவாகும் நிலை ஏற்படும்.இவற்றினை செய்ய தவறினால் தமிழர்களின் பொருளாதார நிலைமை சரிவடைந்து இருப்பும் எதிர்காலமும் சரிந்துசெல்வதற்கான வாய்ப்புகள் அதிகளவில் காணப்படுகின்றமை மிகவும் கவலைக்குரியதாகும்.

• • •





## மீண்டும் தலைதூக்கும் ... தொடர்ச்சி...

புறக்கணித்துவிட்டு, ஆக்கிரமிப்பாளர்களுடன் கைகுலுக்குவது அநுரகுமார அரசாங்கம் சொல்லும், 'இன,மதவாதமற்ற மாற்றத்திற்கு' விடப்பட்ட சவாலாகும். இது பௌத்த மேலாதிக்கத்தை நிலைநிறுத்த சட்டத்தை வளைக்கும் மிகக் கீழ்த்தரமான செயலாகும்.

மகா சங்கத்தினர் முன்வைத்துள்ள 10 அம்சப் பிரகடனத்தில் 'தொல்பொருள் பாதுகாப்பு' என்ற போர்வையில் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள காணிகளை அபகரிக்கும் திட்டம் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே குருந்தூர் மலை, திருகோணமலை போன்ற பகுதிகளில் நீதிமன்ற உத்தரவுகளையும் மீறி சிலைகள் வைக்கப்படுவதும், விகாரைகள் எழுப்பப்படுவதும் சட்டத்தின் ஆட்சியை கேலிக்குள்ளாக்குகின்றது.

அத்துடன் பிரகடனத்தில் 'பிக்குகளை விமர்சிப்பவர்களுக்கு எதிராகக் கடும் சட்டங்கள் வேண்டும்' என்ற கோரிக்கை, மதத்தின் பெயரால் செய்யப்படும் அநீதிகளை எவரும் தட்டிக்கேட்கக் கூடாது என்ற சர்வாதிகாரப் போக்கின் வெளிப்பாடாகும்.

வறுமையைப் பயன்படுத்தி மதமாற்றம் செய்வதைத் தடுக்க வேண்டும் எனக்கூறும் இவர்கள், அதே வறுமையால் வாடும் வட-கிழக்கு மக்களின் காணிகளை மதத்தின் பெயரால் பறிப்பது எந்த தர்மத்தில் சேரும்? அது ஆன்மீகப் போர்வையில் முன்னெடுக்கப்படும் நிலப் பறிப்பு யுத்தமே தவிர வேறில்லை.

கடந்த காலங்களில் இதேபோன்ற பௌத்தவாதக் கோசங்கள் தான் நாட்டை வங்குரோத்து நிலைக்கு இட்டுச் சென்றிருக்கின்றன. தற்போதும் அதன் தாக்கங்கள் நீடிக்கின்றன.

1956 இன் சிங்கள மட்டும் சட்டம் முதல், ஈஸ்டர் தாக்குதலுக்குப் பிந்தைய முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகள் வரை அனைத்துக்கும் பௌத்த மதத்தின் பெயராலான தீவிரவாதப் போக்குகளே வித்திட்டன. இப்போது பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் வேளையிலும், அரசாங்கத்தைப் பழிவாங்கும் நோக்கோடும், மதவாதத்தைத் தூண்டி குளிர்காயவும் முற்படுவது மகா சங்கத்தினரின் பொறுப்பற்ற செயலாகும். நாட்டு மக்களின் பசியை விடவும் மதச்சின்னங்களின் பிரம்மாண்டமே அவர்களுக்கு முக்கியமானதாகத் தெரிகிறது.

பௌத்த பிக்குகளின் இத்தகைய அரசியல் தலையீடுகள், இலங்கையின் ஜனநாயகப் பண்புகளை முற்றாகத் தகர்த்து வருகின்றன. பிரிவெனா கல்வி மற்றும் பௌத்த பல்கலைக்கழகங்களின் சுயாதீனம் பற்றிப் பேசும் இவர்கள், அதேநேரத்தில் பிற மதத்தவர்களின் வழிபாட்டு உரிமைகளைச் சிறுமைப்படுத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

விகாரைகளைச் சுற்றியுள்ள நிலங்களை 'தேசிய மரபுரிமை' என்ற பெயரில் அபகரிப்பதன் மூலம், தமிழ் பேசும் மக்களின் வாழ்வாதாரத்தையும் பூர்வீக அடையாளங்களையும் அழிக்கும் 'பண்பாட்டு இனப்படுகொலையை' தேரர்களே அரங்கேற்றி வருகின்றார்கள்.

அதுமட்டுமன்றி, முன்னாள் படையதிகாரிகளான கமல் குணரத்ன, சரத்வீரசேகர போன்றவர்களின் மறைகரம் இருப்பதும் மகா சங்கத்தினரின் நிகழ்ச்சி நிரலை அம்பலப்படுத்துவதாக உள்ளது. அவ்வாறிருந்தபோதும் இதனைத் தட்டிக்கேட்க வேண்டிய நீதித்துறையும், நிர்வாகமும் மதத் தலைவர்களின் அழுத்தங்களுக்குப் பணிந்து போவது தேசத்தின் வீழ்ச்சிக்கான அறிகுறியாகும்.

பௌத்த மதக் கொள்கைகள் தனிமனித வாழ்வியலை வடிமைப்பதில் மேன்மையானவை. ஆனால், இலங்கையில் முன்னாள் படை அதிகாரிகளாலும், அரசியலில் தடம் பதிக்கத் துடிக்கும் பிக்குகளாலும் ஒரு 'நச்சுக் கருவியாக' மாற்றப்பட்டுள்ளது.

இனவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அநுரகுமார திசாநாயக்க, இந்த மதவாத அழுத்தங்களுக்குப் பணிந்து போவாரானால், அவரும் முந்தைய ஆட்சியாளர்களைப் போலவே தோல்வியடைந்த தலைவராகவே வரலாற்றில் பதிவாகுவார்.

வடக்கிலும் கிழக்கிலும் மக்களின் நிலங்களைப் பறித்து விகாரைகளை எழுப்புவதும், மகா சங்கத்தினரின் சட்டவிரோதக் கோரிக்கைகளுக்குத் தலைவணங்குவதும் இலங்கையின் அழிவுப்பாதையை மீண்டும் திறப்பதாகும்.
உண்மையான நல்லிணக்கம் என்பது நில ஆக்கிரமிப்பிலும், ஒரு மதத்திற்கு மட்டும் முன்னுரிமை அளிப்பதிலும் இல்லை. அனைத்து மக்களையும் சமமாக நடத்துவதிலேயே உள்ளது. இந்த உண்மையை உணராதவரை, இலங்கையில் பௌத்தவாதம் என்பது என்றும் தீராதவொரு 'சாபக்கேடாகவே' தொடரும்.

• • •

## வடக்கின் சீரற்ற ... தொடர்ச்சி...

முல்லைத்தீவு மாவட்டத்தின் தேவையை முல்லைத்தீவு மாவட்ட ஆளணியைக் கொண்டே நிறைவு செய்ய இயலும் என்பதையும் இதன்போது கல்வி அமைச்சின் அதிகாரிகளின் கவனத்தி ற்கு கொண்டுவந்தேன்.

எது எவ்வாறாயினும் வடமாகாணத்தில் காணப்படும் சமச்சீரற்ற ஆசிரியவளப் பரவலாக்கத்தை விரைந்து சீர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை இதன்போது மீண்டும் வலியுறுத்தியிருந்தேன்.

இந்நிலையில் இந்த சீரற்ற ஆசிரியவளப் பரவலாக்க விடயத்தில் வட மாகாண கல்வி அமைச்சிலேயே குறைபாடுகள் இருப்பதாக இதன்போது தெரிவித்தார்.

எனவே தாம் வடமாகாண ஆளுநருக்கு தெரியப்படுத்தி இந்த சமச்சீரற்ற ஆசிரியவளப் பரவலாக்கத்தைச் சீர்செய்ய நடவடிக்கை மேற்கொள்வதாகவும் கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் தமக்கு பதில் வழங்கியதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது தெரிவித்தார்.

இந்த நிலையில், வடக்குமாகாண ஆளுநர் ஊடாக வடக்குமாகாணத்தில் நிலவும் சீரற்ற ஆசிரியவளப் பற்றாக்குறையைச் சீர்செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென கல்வி அமைச்சின் மேலதிகச் செய

## நேட்டோவின் மாநாட்டில் ... தொடர்ச்சி...

இந்தோ-பசிபிக் நட்பு நாடுகள் ஜூலை மாதம் அங்காராவில் நடைபெறும் கூட்டணியின் வருடாந்த உச்சிமாநாட்டில் பங்கேற்பதைத் தடுக்கவும் அமெரிக்கா வற்புறுத்தியுள்ளது. இந்த முயற்சி, நேட்டோவை யூரோஅட்லாண்டிக் பாதுகாப்பு ஒப்பந்தமாகக் கருதி பல தசாப்தங்களாக நெருக்கடி மேலாண்மை, உலகளாவிய கூட்டாண்மைகள் மற்றும் மதிப்புகள் சார்ந்த முன்முயற்சிகளாக விரிவாக்குவதைத் திரும்பப் பெறுவதற்கான வெள்ளை மாளிகையின் உந்துதலை பிரதிபலிக்கிறது.

வாஷிங்டனின் அழுத்தத்தால், நேட்டோ "வெளிப்புற நடவடிக்கைகள்" என்று அழைக்கப்படுவதைக் குறைக்கும், அவை கூட்டணியின் பாதுகாப்பு மற்றும் தடுப்புக்கான முக்கிய பணிகளுக்கு அப்பாற்பட்டவை. இந்த முயற்சி முன்னாள் போர் மண்டலங்களில் நேட்டோவின் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமாவதையும், இந்த கோடையில் கெய்வ் மற்றும் கான்பெர்ரா உள்ளிட்ட தலைநகரங்களை விவாதங்களிலிருந்து மூடுவதையும் காணலாம்.

POLITICO தொடர்பு கொண்டபோது, நேட்டோவின் கூட்டாண்மை திட்டங்கள் மற்றும் உலகளாவிய நடவடிக்கைகள் குறித்து வெள்ளை மாளிகை பகிரங்கமாக கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டது.

அமெரிக்க துணை பென்டகன் தலைவர் எல்பிரிட்ஜ் கோல்பி சமீபத்தில் "நேட்டோ 3.0" என்று அழைத்ததற்குப் பின்னால் நிர்வாகத்தின் சிந்தனையை விளக்கியதைத் தொடர்ந்து இந்த புதிய விவரங்கள் வந்துள்ளன.

## தலைவர் பிரபாகரனின்... தொடர்ச்சி...

என்று அவர் சுட்டிகாட்டினார்.

ஆனால் இப்போது நிலைமை தலைகீழாக காணப்படுகிறது. சட்டம் ஒழுங்கு முறையாக செயற்படாமையால் போதைப்பொருள் பாவனை தீவிரமடைந்துள்ளது. மலையகத்திலும் இப்போது அவ்வாறான நிலைமையே உள்ளது. எவ்வாறாயினும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

இது பாராட்டத்தக்க விடயமே. ஆனால் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னரே தினமும் கொலை இடம்பெறும் நிலைமை காணப்படுகின்றது என்று பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

## கையெழுத்து போராட்ட ... தொடர்ச்சி...

தழுவிய ரீதியில் கையெழுத்துப்போராட்டம் நடைபெற்றது. கையெழுத்து பெறப்பட்ட படிவங்களுக்கு என்ன நடந்தது என்றே தெரியாது.


இதுபோல் 2025 ஜூலை மாதம் சம உரிமை இயக்கம் எனும் அமைப்பும் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க கோரி கையெழுத்து போராட்டம் நடத்தியது அதனாலும் எந்த பலனும் இல்லை.

இப்போது மீண்டும் கையெழுத்துப்போராட்டம் ஆரம் பமாகியுள்ளது. இதன் மூலமும் எதிர்ப்பை மட்டும் காட்டலாம். ஆனால் சட்டம் முழுமையாக நீக்கப்படுமா என்பதே சந்தேகம்.

சர்வதேசமும், ஐ.நா அமைப்பும், அனைத்துல மனித உரிமை அமைப்பும், இந்த கொடிய சட்டத்தை நீக்குமாறு அழுத்தம் கொடுத்தும் கண்டுகொள்ளாத ஆட்சியாளர்களே இலங்கையில் உள்ளனர் என்பதே வரலாறு.

• • •




இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .



# தாயகமும் வாழ்வும்





